# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 116 இதழ் : 16 4-5-1990 (மே 4 — மே 11) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு விலை ரூபா 2/=


**மூதன்மை நிலை**

| | | |
|---|---|---|
| 1 | யாழ் சென்ஜேம்ஸ் | 500 |
| 2 | இளவாலை | 375 |
| 3 | அச்சுவேலி | 315 |
| 4 | நாவாந்துறை | 300 |
| 5 | கரம்பொன் | 295 |
| 6 | பேசாலை | 250 |
| 7 | சில்லாலை | 250 |
| 8 | மன்னார்பேராலயம் | 222 |
| 9 | மாதகல் | 212 |
| 10 | வங்காலை | 210 |
| 11 | பருத்தித்துறை | 208 |
| 12 | மானிப்பாய் | 205 |
| 13 | பாண்டியன்தாழ்வு | 201 |
| 14 | மண்டைதீவு | 181 |
| | மொத்தப் பிரதிகள் | 8730 |

### 28வது பேரணி கருத்து: "புனிதத் தன்மையின் உணர்வுக்குத் திரும்ப"

## வைகாசி 6 ஞாயிறு பி.ப. 3.00 மணிக்கு

# அனைத்துலக செபமாலைப் பேரணி

அகில உலகிலுமுள்ள பலகோடிமக்களுடன் ஆன்மீக ஒருமைப்பாட்டில் இணைந்து, செபமாலைப் பேரணியில் பங்குகொள்ள, அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஞாயிறு பிற்பகல் மூன்று மணிக்கு, வீட்டிலோ, ஆலயத்திலோ, குடும்பமாகவோ, நண்பர்களுடனோ ஒரே நேரத்தில் செபமாலையில் ஈடுபட்டு "புனிதத்தன்மையின் உணர்வுக்குத் திரும்ப" என்ற பொதுக்கருத்துக்காகச் செபியுங்கள்.

இவ்வாண்டு வைகாசி 6ஆம் திகதி பி. ப. 3, 00 மணிக்கு நடைபெறும்28வது அனைத்துலக செபமாலைப் பேரணியின் கருப்பொருள் "புனிதத்தன்மையின் உணர்வுக்குத் திரும்ப" என்பதாகும்.

செபமாலைப் பேரணியை ஆடம்பரமாகவோ எளியமுறையிலோ செய்து, அகில உலகிலுமுள்ள பலகோடி மக்களுடன் ஆன்மீக ஒருமைப்பாட்டில் இணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கத்தோலிக்க திருச்சபையின் தனிச்சிறப்பான செபமாலையை அனைத்துவிசுவாசிகளும் பற்றிக்கொள்ள, சிறிய அளவிலாவது இதைப்பகிரங்கப் படுத்த கேட்கப்பட்டுள்ளீர்கள்.

வீட்டிலோ, ஆலயத்திலோ, குடும்பமாகவோ, நண்பர்களுடனோ அனைத்துலக செபமாலைப் பேரணியில் பங்கு கொள்ள முடியும்.

## கத்தோலிக்க திருமறைக் கொள்கைகள் அடங்கிய நூல்கள்

### அங்கீகாரத்துடன் அச்சேற்றப்படவேண்டும்

கத்தோலிக்க திருமறைக் கொள்கைகளை அடக்கியுள்ள நூல்களை எப்போதும் ஆயரின் அல்லது ஆயரது அனுமதி பெற்றவர்களின் அங்கிகாரத்துடன் வெளியிடவேண்டும் என யாழ். ஆயர் பேரருட்திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கண்டிப்பான கட்டளை பிறப்பித்துள்ளார்.

ஆயரின் அங்கீகாரமின்றி அச்சேற்றப்படும் கத்தோலிக்க திருமறைக் கொள்கைகள் அடங்கியுள்ள நூல்களைப்பற்றி வாசகர்கள் கவனமாக இருக்கவேண்டும் என்றும் யாழ். ஆயர் அவர்கள் பணித்துள்ளார்கள். இத்தகைய நூல்களில் அடங்கியுள்ள கருத்துக்கள் கத்தோலிக்க திருச்சபையின் கொள்கைகளுக்கு ஏற்றமுறையில் அமைந்துள்ளன என நம்பி அவைகளைப் பயன்படுத்தக் கூடாது எனவும் ஆயர் அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

## தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவருக்கு சம உரிமை

இந்தியாவில் இந்துக்களிலும் சீக்கியரிலும்தாழ்த்தப் பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் கிறிஸ்தவருக்கும் அளிக்கப்படவேண்டும் என தமிழ்நாடு கிறிஸ்தவ சபைகள் கோரியுள்ளன. 1950 முதல் இந்துக்களுக்கும், சீக்கியருக்கும் அளிக்கப்பட்டுவரும் இச்சலுகைகள் கிறிஸ்தவரிடையே சாதிபேதம் இல்லையென்ற காரணம் காட்டிமறுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மதம் மாறிய காரணத்தால் ஒரு வகுப்பினரின் சமூக, பொருளாதார, கல்வி நிலைகள் உயருவதில்லை என உணர்ந்துள்ள கிறிஸ்தவர்கள் இவ்வுரிமைகளுக்காக பன்முறை குரல்கொடுத்தும் அவை இன்னும் அளிக்கப்படவில்லை.

## சிலாப ஆயரின் ஆலோசனை

பாடசாலையில் மறைக் கல்விகற்பிக்கப்படும் நேரத்தை அதிகரிப்பதும், திருச்சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு குருவின் மேற்பார்வையில் இம்மறைக்கல்வி போதிக்கப்படுவதும் சிலாபஆயர்பேரருட் திரு. பிராங் மார்க்கஸ் பெர்னான்டோ அவர்களால் கல்வி அமைச்சுக்குத் தெரிவிக்கப் பட்ட ஆலோசனைகளாகும். சமயம் கற்பிப்பதற்கு மறை ஆசிரியர்களை நியமிப்பதும் ஆயரது ஆலோசனையாகும்.

## அன்னை திரேசா ஓய்வு பெறுகிறார்

81 வயதான அன்னை திரேசா தாமே உருவாக்கி 40 வருடங்களாக நிர்வகித்து வந்த துறவற சபையின் நிர்வாகப் பொறுப்புக்களை இளைய தலைமுறையினரிடம் ஒப்படைத்து ஓய்வுபெறப் போவதாக திருத்தந்தைக்கு அறிவித்துள்ளார். உலகெங்கும் 400 இல்லங்களை உருவாக்கிய இச்சபை, கைவிடப்பட்டவர்களைப் பராமரித்து வருகின்றது.

**06-05-1990**

தேவஅழைத்தல் தினம்
திருத்தந்தையின் செய்தி
உள்ளே ......

ஆயர் திருநிலைப்படுத்தலின்

### ஏழாம் ஆண்டு நிறைவு

**07-05-1990**

வாழ்க! வாழ்க!!

திருமலை — மட்டுநகர்

ஆயர் அவர்களுக்கு

**அன்பு வாழ்த்துக்கள்**



அருமறையின் கிங்ஸ்லிசுவாம்பிள்ளை ஆயர்
ஆன்மபரி கத்தரெனஅகிலம் போற்றும்
பெருமை பெறக் கருணையுளக் கடலாய் ஆயுள்
பெருகிடவே பல்லாண்டு வாழ்க! வாழ்க!!

ஆயர் திருநிலைப்படுத்தலின்

### 23 ஆம் ஆண்டு நிறைவு

**11-05-1990**

யாழ். ஆயர்

அவர்களுக்கு

எம்

இதயங் கனிந்த

அன்பு வாழ்த்து



தேன்மதுர மலரொளிரும் வதனரூபன்
தியோகுப்பிள்ளையெம தாயர் தந்தை
கான் பெருகு நதிக்கரைப் பொன்மணலாய் ஆயுள்
கண்டுதிருக் கடனாற்ற வாழ்த்துகிறோம்.

**காத்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

# எம் கருத்து

## செபமாலைப் பேரணி

வந்ததே வணக்கமாதம். அனைத்து கத்தோலிக்க இல்லங்களிலும், ஆலயங்களிலும் தேவதாயாருக்கு தனி இடம் கொடுக்கப்படும் மாதம்.

பூத்துக் குலுங்கும் மாதமாம் வைகாசி மாதத்திலே, அன்னையின் திருப்பாதங்களை மலர்களால் நிறைத்து செபமாலையாலும், பிற செபங்களாலும் அன்னையை அலங்கரிக்கும் மாதம்.

ஆண்டுதோறும் பல்வேறு விழாக்கள் வந்து செல்வது போல வணக்கமாதமும் வந்து செல்கின்றது. இவ்வணக்கமாதத்தை அதற்குரிய தனிச்சிறப்புடன் நினைவுகூரும்போது தொன்று தொட்டு மக்கள் பெற்றுவந்த மறை அனுபவத்தையும், இறை அனுபவத்தையும் பெற முடியும்.

இவை காலத்துக்கொவ்வாதவை என்று தட்டிக் கழிப்பது மடமையானது. திருச்சபையின் வாழ்விலும், வளர்ச்சியிலும் கத்தோலிக்க விசுவாசிகளின் வாழ்விலும், வளர்ச்சியிலும் அன்னை மரியாளின் பங்களிப்பு வெறும் வார்த்தைகளால் கூறி முடிக்க முடியாத அளவுக்கு எண்ணற்றது.

இத்தகைய வியப்புக்குரிய பங்களிப்பை ஆற்றிய அன்னை மரியாளை நன்றியோடு நினைவுகூர வணக்க மாதம் சிறந்த மாதமாகும். உள்ளத்தின் உணர்வுகளையும், வாழ்க்கையின் வழிகளையும் அன்னையின் உணர்வுகளோடும், வழிகளோடும் இணைத்து, சிந்தித்து, தியானித்து, புதுத்தெம்பு பெற்று, வாழ்க்கைப் பயணத்தைத்தொடர இதுவே உகந்த மாதமாகும்.

தற்கால மனிதனின் உணர்வுகளை மதித்து, தேவைகளை நிறைவுசெய்ய, அண்மைக்காலத்தில் செபமாலைப் பேரணி ஆரம்பிக்கப்பட்டது. உலகெங்கும் உள்ள விசுவாசிகளை ஒருங்கிணைத்து எல்லோரும் ஒன்றாக, ஒரே செபத்தில் ஈடுபடுவோம் என்ற அழைப்பை விடுத்து, இக்காலத்தில் செபமாலைப் பேரணி நடத்தப்படுகிறது.

இப்பேரணியின் மூலமாக அன்னைமரியிலோ, செபமாலையிலோ எதுவித அர்த்தத்தையும் இதுவரை கண்டு கொள்ளாத ஏராளமான மக்களுக்கு, புதிய அனுபவம் கொடுக்கப்படுகிறது. இச்சந்தர்ப்பத்திலே தாம்பெறும் புதிய அனுபவத்தின் மூலமாக எத்தனையோ மக்கள் இறை அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்கள். புதிய பாதையை வகுத்திருக்கிறார்கள். செபமாலைப்பக்தியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வாண்டு 28 வது அனைத்துலக செபமாலைப் பேரணி வைகாசி 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

வணக்கத்தின் வைகாசிமாத முதல் ஞாயிறு தினத்தில் அகில உலகிலுமுள்ள பலகோடி மக்களுடன் ஆன்மீக ஒருமைப்பாட்டில் அனைவரையும் இணைய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை நேரப்படி பிற்பகல் 3.00 மணிக்கு அனைத்துலக செபமாலைப் பேரணி நடைபெறும். ''புனிதத் தன்மையின் உணர்வுக்குத் திரும்ப'' என்ற குறிப்பிட்ட பொதுக் கருத்துக்காக செபிக்க அழைப்பு விடப்பட்டுள்ளது.

புனிதத்தன்மையைப் பேண வேண்டும் என்ற உணர்வு நாம் வாழும் இக்காலத்தில் அருகிவருவதை அனைவரும் ஏற்றுக் கொள்கிறோம். மனிதர் புனிதத் தன்மையை உணர்ந்து போற்ற செபிப்பது அவசியமாகும்.

இவ்வாண்டு தேவ அழைத்தலுக்காக செபிக்கும் தினத்திலே நிகழும் அனைத்துலக செபமாலைப் பேரணியில் அழைத்தல்கள் பெருக செபிப்போம்.

குருத்துவ உருவாக்கலைப்பற்றி சிந்திக்கும் இவ்வாண்டு மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளும் பலனளிக்க வேண்டும் என்று செபிப்போம்.

# தேனருவி

### பாஸ்கா காலம் 4ஆம் ஞாயிறு (6-05-90)

## நல்ல ஆயனா?

கைதிகளைச் சந்தித்துப் பேச விரும்பிய குருவானவர் ஒருவர் ஒரு சிறைச்சாலைக்குச் சென்றார். அங்குள்ள பெரிய குற்றவாளிகளுக்கு மத்தியில் ஒரி இளைஞனைக்கண்டு மனவேதனைப் பட்ட அவர் அவனை அணுகி அவனது தோளின் மேல் கை வைத்து ஒரு தந்தைக்கு உரிய அன்போடு கேட்டார். ''மகனே, நீஎப்படி இங்கு வந்தாய்?'' இளைஞனின் கண்களில் நீர் பெருக்கெடுத்தது. பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டு தாழ்ந்த குரலில் சொன்னான்'' ஓ்பாதர் இது போல யாராவது அன்போடு என்னை அணுகியிருந்தால் நான் இங்கு வந்திருக்க மாட்டேன்.''

எமது அணுகுமுறையில் அன்பு மறைகிறபோது, சிறைக்கூடங்கள் பல உதயமாகக் காரணமாகின்றோம். பராமரிப்பில் பாசம் அற்றுப்போகின்ற போது புரட்சிகள் வெடிக்கக் காரணமாகின்றோம், ஒரு பரம்பரை இன்னொரு பரம்பரையை உருவாக்குகின்றது. அதனால் ஒவ்வொரு மனிதனும் வாழ, வளர, மிளிர இன்னுமொருவரில் தங்கி வாழ்கிறான். உயிருக்கு உயிர்காவல் என்பதற்கு அமைய காவலாகவும், பொறுப்பாளராகவும் செயல் புரிபவர் உயிரைக் கொடுத்து உயிரைக்காக்கும் போது இயேசுவுக்கு ஒப்பான நல்ல-ஆயன்களாகத் திகழ்கின்றனர்.

நல்ல ஆயன் என்பவனோ தன் மந்தை மீது அதிக அக்கறை உள்ளவனாய் இருப்பதால் நூற்றுக் கணக்கில் இருப்பினும் ஒவ்வொன்றின் பெயரையும் அறிகிறான். பசும்புற்தரையும், வற்றாத நீர் அருவிகளும் அவனது பார்வைக்குத் தப்புவதில்லை. இருளும், ஓநாயும் அவனது விழிகளை மூட விடுவதில்லை. மந்தை -உடனும், மந்தை பொருட்டும் வாழ்வதே அவனது இன்பம்.

பிள்ளைகள் வளர பெற்றோர் என்னும் ஆயன் அவசியம். அதுபோல மாணவருக்கு, ஆசிரியரும், தொழிலாளிக்கு, முதலாளியும், மக்களுக்கு, ஆட்சியாளரும், பாமரருக்குக், கற்றோரும், இளையோருக்கு, முதியோரும், இறைமக்களுக்கு ஆன்மீக வழிகாட்டிகளும் நல்ல ஆயன்களாகக் கடமை புரிய அழைக்கப்படுகின்றனர்.

இப்பொறுப்பை அலட்சியப் படுத்துவதால் அந்நியர்களாகலாம். துர்ப்பிரயோகம் செய்வதால் கொள்ளைக்காரர்களாகலாம். இயேசுவுக்கு ஒப்பான ஆயன்களாக எம்மை உருவாக்க பல வழிகள் உண்டு. உயிரைக்கொடுக்கும் ஓர் உயர் நாளுக்காகக் காத்திருப்பது என்பதல்ல. எமது அந்தஸ்துக்கு அமைய நாம் வழங்கும் பராமரிப்பிலும், எம் அணுகுமுறையிலும் இயேசுவின் மனநிலையும், பண்புகளும் மிளிருகின்றனவா என்பது எம்மைச் சிந்திக்கத் தூண்டவேண்டும். நல்ல ஆயராகிய இயேசுவின் உள்ளத்தின் விளங்கிய அறிவுப்பொறுப்பு, பாசம், பங்களிப்பு, தியாகம், திடமனம், கனிவு, கரிசனை என்னிலும் வளர, வளர்க்க அருள் வேண்டுவோம்.

சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

அப். பணி. 2: 14, 36 - 41 நாங்கள் என்ன செய்யவேண்டும்?
இரா. 2: 20 - 25 ஆயனிடம் திரும்பியுள்ளீர்கள்.
அரு. 10 : 1 - 10 ஆடுகள் உயிர்பெற வந்தேன்.

# கலைநிலா

## தொலைக்காட்சியிலும் மேடையிலும் திருமறைக்கலாமன்றத்தின் உயிர்ப்புவிழா நிகழ்ச்சிகள்

இவ்வாண்டு பாஸ்குக் காலத்தை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் சில நிகழ்ச்களைத் தயாரித்திருந்தது. மேற்படி நிகழ்ச்சிகள் கடந்த 12ம் 13ம் திகதிகளில் (பெரிய வியாழன், பெரிய வெள்ளி) தினங்களில் ரூபவாகினியில் ஒலிபரப்பாயின. இவை இருபது நிமிடநேர நிகழ்ச்சிகளாகும். பெரிய வியாழன் அன்று திரு. M. J. தாஸ் அவர்களின்இசையமைப்பில் உருவான ஈஸ்ரர் கீதங்களும், பெரிய வெள்ளியன்று அருட்தந்தை நீ. மரிய சேவியர் அவர்களின் கருத்தில் உருவான 'களங்கம்' இசை, உரைத் தியான நாடகமும் இடம் பெற்றன. இந்நாடகம் ரூபவாகினி நிகழ்ச்சிக்காக இருபது நிமிடங்களாகச் சுருக்கப்பட்டிருந்தது. 'களங்கம்' அதன் முழுவடிவில் கடந்த27ம் திகதி திருமறைக்கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்பட்டது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இரண்டும் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தன. குறிப்பாக ஈஸ்டர் கீதங்கள் இசையும், குரலும் பெரும் அமைதி கண்டவையாக மிகவும் அனுபவம் மிக்க கலைஞர்களின் படைப்பையொத்தவையாக அமைந்திருந்தன. ஆயினும் ஒளிப்பதிப்பாளரின் படப்பிடிப்பில் அனுபவமின்மை தெரிந்தது. ஒரு இசை நிகழ்ச்சியைப் பதிவு செய்யும் போது இசையமைப்பாளருக்கு கொடுக்கவேண்டிய முக்கியத்துவத்தை அவர் கொடுக்கத்தவறியிருந்தார். இந்நிகழ்ச்சி சிறப்பாக அமைந்ததை முன்னிட்டு இசையமைப்பாளர் M. J. தாஸ் வாத்தியக்காரர்கள், பாடகர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள். உடைத்தெரிவில் (குறிப்பாக ஆண்கலைஞர்களின்) கூடிய கவனம் செலுத்தியிருக்கவேண்டும்.

'களங்கம்' நாடகத்தைப் பற்றி நாம் பேசும்போது திருப்பாடுகளின் காட்சிக்கும், இயேசுவின் வாழ்வை மையமாகக் கொண்டு தயாரிக்கப்படும் ஒரு நாடகத்திற்கும் இடையிலான வேறுபாட்டை விளங்கிக் கொள்வது அடிப்படைத் தேவையாகிறது.

திருப்பாடுகளின் காட்சியென்பது பொதுவில் நற்செய்திகளுடன் கூடியவரையில் இணைந்ததாகவும்,சம்பவத் தொகுப்புக்களும், கால ஒழுங்கும், வசனங்களும் நற்செய்திகளிலிருந்தே பெறப்பட்டவையாகவும் அமைந்திருக்கும். அதன் நோக்கமும் மிகவும் எளிமையானது. கிறிஸ்துவின் பாஸ்காச் சம்பவங்களைக் கூடியளவு தத்ரூபமாகக் காட்டி பார்வையாளர்களுக்கு கிறிஸ்துவின் பாடுகள், மரணம், பற்றிய அறிவைக் கொடுப்பதும் அதுபாற்பட்ட சிலபல உணர்ச்சிகளை ஏற்படுத்துவதுமே அந் நோக்கமாகும். இது தவிர கதாசிரியரின் செய்தியோ கருத்தேற்றமோவெளிப்படையாகக் காட்டப்படாது.

ஆனால் இயேசுவின் வாழ்வை மையப்படுத்தி ஆக்கப்படும் நாடகங்கள் இப்போக்குகளுக்கு முரணானவை. அவை இயேசுவின் வாழ்வை மையப்படுத்தியவையாகவே இருந்தாலும் கதாசிரியர் கூறவிரும்பும் செய்தியையும் கொண்டு நிற்கும். இதில் குறியீடுகளும், புதுமுயற்சிகளும். நவீனப்படுத்தல்களும் ஊமம் போன்ற நிகழ்ச்சிகளும் மேற்கொள்ளப்படலாம்.

(இவை திருப்பாடுகளின் காட்சியில் நிராகரிக்கப்படுகின்றன. ஏனெனில் தத்ரூப தன்மையைக் குறைக்கின்றன.)

(தொடரும்)

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள்பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

Chundikuli Branch Library

# புனித சூசையப்பர் துறவறசபைத் துறவிகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கொழும்புத்துறையை தலைமை மடமாகக் கொண்டு 1894 ம் ஆண்டு மன்னாரிலும் 1898-ம் ஆண்டு ஊர்காவற்றுறையிலும், 1899-ம் ஆண்டு பேசாலையிலும், 1900-ம் ஆண்டு முல்லைத்தீவிலும், 1910-ம் ஆண்டு இளவாலையிலும், 1917-ம் ஆண்டு மாதகலிலும், மடங்கள் விஸ்தரிக்கப்பட்டன. யூலன் ஆண்டகை பேராதரவினால் யாழ மறை மாவட்டமெங்கும் துரிதகதியில் புனித சூசையப்பர் சபைத் துறவிகள் வளர்ச்சி கண்டனர். பாடசாலைகள் பலவற்றின் நிர்வாகம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. வியத்தருவகையில் அப்பாடசாலைகள் உயர்ச்சிபெற்றன. புதிய கட்டடங்கள் உருவாக்கப் பட்டன. அவ்வப்பகுதி மக்கள் உற்சாகம் கரைபுரண்டோட இத்துறவிகளுக்கு கை கொடுத்துதவினர்.

புறோ ஆண்டகையின் காலத்திலேதான் இச்சபைக்கான சட்டதிட்டங்களும், ஒழுங்குவிதிகளும், புதிய கனன் சட்டத்துக்குள் கொண்டுவரப் பட்டது. 1922 ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் கூடிய இச்சபையின் முதலாவது அதிசிரேஷ்டராக அருட்சகோதரர் S. பிலிப் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.

பாடசாலைகளை நிருவகித்து, அவற்றைக் கட்டி எழுப்பி காலத்தின் தேவைக்கேற்ப வளர்த்தெடுத்து சகல துறைகளிலும் உயர்வடையச் செய்ய இவர்கள் அயராது உழைத்தனர். இளவாலை என்றியரசர் கல்லூரி, அவன் விடுதிச்சாலை. புனித அந்தோனியார் கனிஷ்ட வித்தியாலயம் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி. வதிரி திரு இருதயக் கல்லூரி என்பன இவர்களது உழைப்பாலும், ஊக்கத்தாலும் சிறந்து விளங்கின. கண்ணீரும், செந்நீரும் ஊற்றி இக்கல்வி நிறுவனங்களை வளர்த்தெடுத்துப் புகழீட்டச் செய்தனர்.

கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை நிருவகித்துத் திறமைவாய்ந்த ஆசிரியர் பரம்பரை ஒன்றை யாழ் மறைமாவட்டத்தில் தோற்றுவித்தனர். கொழும்புத்துறையில் அச்சகம் ஒன்றையும், அநாதைச் சிறுவர் விடுதியையும் நிருவகித்தனர்.

கடல் கடந்து பர்மா சென்று றங்கூனில் ஒரு கிளையைத் தாபித்து அங்கும் கல்விப்பணி ஆற்றிவந்த போது இரண்டாம் உலகமகாயுத்தத்தின் காரணமாக அது கைவிடப்பட்டு நாடு திரும்பினர். சிங்கப்பூர், மலேயா வரை சென்று நிதி திரட்டி வந்து இளவாலை, ஊர்காவற்றுறை, வதிரி முதலாம் இடங்களில் உள்ள பாடசாலைகளைக் கட்டி எழுப்பினர். புனித சூசையப்பர் சபையிலே சுடர்விட்டுப் பிரகாசித்து சபையின் வளர்ச்சிக்கும், அதன் நற்பணிகளுக்கும் உரமிட்டவர்களில் ஒரு சிலரை ஈண்டு குறிப்பிடுதல் வேண்டும்.

1922இல் சபையின் முதல் சிரேஷ்டராகத் தெரிவுசெய்யப்பட்ட அருட்சகோதரர் S. பிலிப் அவர்கள் சபைக்காகத் தீவிரமாக உழைத்தவர் என்று கூறலாம். சிந்த கல்விமான். செல்வாக்கு மிகுந்தவர் நாவன்மை, செயற்றிறம் படைத்தவர். அக்காலத்தில் கல்வி ஆணைக்குழுவில் உறுப்பினராயிருந்து கத்தோலிக்க பாடசாலைகளின் நலன்களுக்காக உழைத்தவர். சிறந்த நிருவாகி எனப் புகழப்பட்டவர்.

கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையை நிருவகித்து அதன் அதிபராகப் பணியாற்றிய அருட்சகோதரர் இன்னாசிமுத்து அவர்கள்; இளவாலை, வதிரி ஆதியாம் இடங்களில் அதிபராகவும், பின் சபையின் சிரேஷ்டராகவும் பணியாற்றிய அருட்சகோதரர் பாக்கியநாதர்; அருட்சகோதரர் பெஞ்சமின், சகோதரர் பேதுருப்பிள்ளை, சகோதரர் யோண்மேரி, சகோதரர் சைமன், ஆகியோர் பல துறைகளில் சிறந்து விளங்கி சபைக்குப் புகழ் சேர்த்த துறவிகளாவர். சகோதரர் இளமென்ற், சகோதரர் தேவசகாயம் ஆகியோரும் முன்னோடிகளான துறவகளாவர்.

மனந்திரும்புதலுக்கு தூண்டுதல் அளிக்கும் துண்டுப்பிரசுரங்களை ஆக்கியும், பங்குத்தளங்களில் தர்க்கப் பிரசங்கங்களை நிகழ்த்தியும் புகழ்பெற்றவர் அருட்சகோதரர் சைமன் அவர்கள். இலக்கியப் பேராசானாய் விளங்கிய இவர் நாவலூர்க் கவிஞர் போன்ற கவிஞர்களை உருவாக்க உதவியவர். இவரும் மக்களிடம் செல்வாக்குப் பெற்ற ஒரு துறவி எனலாம்.

கீர்த்தனை மாலை எனப்படும் பக்திப் பாடல்களை ஆக்கி, இசை அமைத்து ஆலய வழிபாடுகளில் பாடச் செய்தவர் அருட்சகோதரர் யோண் மேரியாவார். ஓய்வுநேரங்களில் விளையாட்டுமைதானத்தில் பாடிப்பாடி, வீணைப் பெட்டியில் இசைத்துப்பார்த்து மெட்டும், சங்கீதக்குறிப்புகளும் அமைப்பதில் வல்லவராயிருந்தார். அச்சுக்கலை, தச்சுத் தொழில், கைப்பணிக்கலைகளும் கைவரப்பட்ட பல்கலை வல்லுனராய் விளங்கினர் புனித சூசையப்பர் சபைத்துறவிகள்.

1936 ஆம் ஆண்டுக்குப் பின் தவிர்க்கமுடியாத காரணங்களால் இச்சபையினர் வடமாகாணத்தை விட்டு நீங்கி கிழக்கு மாகாணத்துக்குச் சென்று தம்பணிகளை அங்கு ஆரம்பித்தனர். மட்டுநகர் திருமலை ஆயர்களின் ஆதரவோடு மட்டக்களப்பிலும், கல்முனையிலும் மடங்களை ஏற்படுத்தி மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அநாதைகள் விடுதி, கல்முனை பற்றிமா கல்லூரி என்பன வற்றை ஆரம்பித்து பொறுப்பேற்று நடாத்தி வந்தனர். இன்று புனித சூசையப்பர் துறவிகள் சபையின் தலைமை மடம் கல்முனையில் அமைந்துள்ளது.

அருட்சகோதரர் A. M. தோமஸ் அவர்கள் சபையின் சிரேஷ்டராகப் பணியாற்றி பலவகையிலும் சபையின் சேவைகளை முன்னெடுத்துச் செல்லுகின்றார். இவர் கற்றன் பொஸ்கோ கல்லூரியின் அதிபராகவும் பல ஆண்டுகள் பணியாற்றியவர். ஆற்றலும், அனுபவமும் மிக்க இவர் பல புதிய திட்டங்களை உருவாக்கி, இளைஞர் தொழில் வாய்ப்புப் பெறத்தக்க தொழிற்பயிற்சி நிலையங்களை நடாத்திவருகின்றார்.

காவலூரிலும், திருமலை, மட்டக்களப்பிலும் தொழிற் பயிற்சிநிலையங்கள் இவர்களது முகாமைத்துவத்தில் இளைஞருக்குப் பயிற்சியளித்து வருவது யாரும் அறிந்ததே.

திருத்தியமைக்கப்பட்ட சபையின் விதிகளுக்கமைய இருகுருமார் 1987ல் திருநிலைப்படுத்தப்பட்டனர். தங்கூலைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்திரு டானியேல் அடிகளாரும், இலங்கையைச் சேர்ந்த அருட்திரு. இம்மானுவேல் அடிகளாரும் புனித சூசையப்பர் துறவிகள் சபையின் குருக்களாக சிறந்து பணியாற்றுகிறார்கள்.

இடர்ப்பாடுகள் பலவற்றின் ஊடாக 125 ஆண்டுகள் மறைத்தொண்டும், கல்விப் பணியும், பொதுநலப்பணிகளும் ஆற்றிவரும் இச்சபையில் 35 துறவிகள் தம்மை அர்ப்பணித்து இறைபணியில் தம்வாழ்வைத் தத்தஞ்செய்துள்ளனர். மென்மேலும் இச்சபையின் பணிகள் சிறக்க வாழ்த்துகின்றோம்.

எஸ். எம். ஜே.

---

## நாக்கு

★ வார்த்தை தயாரிவதில் எவன் தவறாதிருக்கின்றானோ அவன் உத்தமனே ... நாவும் நெருப்பாம். அது அக்கிரமம் நிறைந்த உலகமே... நாவோ எந்த மனிதராலும் அடக்கப்படக் கூடியதாயில்லை. அது அடங்காப் பொல்லாப்பு. ஆலகால விஷம் நிறைந்தது.

(புனித யாகப்பர்)

★ புறணி பேசுகின்றவனும் இரட்டை நாக்கு உள்ளவனும் சபிக்கப்பட்டவனே. ஏனெனில் சமாதானத்துடன் இருக்கும் அநேகருடன் கலகம் உண்டாக்குகின்றான்.

(மன்னா)

★ தசைகளின் அடி தழும்பு உண்டாக்குகின்றது. நாவின் அடியோ எலும்புகளை உடைத்துப் போடுகின்றது.

(மன்னா)

★ துர்நாக்கினின்று காக்கப்பட்டவனும், அதன் கோபத்துள் அகப்படாதவனும், அதன் நுகத்தடியை இழுக்காதவனும் அதன் சங்கிலிகளால் கட்டுப்படாதவனும் பாக்கியவான்.

(சீராக்)

பி. கிறிஸ்துநாயகம்.
யாழ். குருத்துவக்கல்லூரி.

---




### "கலப்பு மணம்"

திருமணம் சமூகச் சார்புடையதாயிருப்பதனால் சமுதாயத்தாக்கங்களையும் அது அடக்கியிருக்கின்றது. பல விளைவுகளைத் தோற்றுவிக்கவல்ல மணவாழ்க்கை பற்றி திருச்சபையும், அரசாங்கமும் மிகுந்த அக்கறை காட்டுவதுடன் திருமணங்களின் "சட்டபூர்வ நிறைவேற்றம்" திருமணச் சடங்குமுறைகள் என்பன சம்பந்தமாக நியந்தனைகளையும், சட்டதிட்டங்களையும் ஏற்படுத்தியுள்ளனர். பல்வேறு வேற்றுமையான கொள்கைகளையுடைய கிறிஸ்தவ சபைப் பிரிவினர்கள் கலப்புமணம் செய்துகொள்ளும்பொழுது பல பிரச்சினைகள் உருவாக்கப்படலாம் முற்காலத்தில் இருந்தது போன்ற தீர்க்கமுடியாத பிணக்குகளைத் தோற்றுவிக்கக் கூடிய கொள்கைகளில் கிறிஸ்து சமயப் பிரிவுச்சபையினரிடையில் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள மனமாற்றம், பரந்த மனப்பான்மை, புரிந்துணர்வு காரணமாக அவ்வாறான பிணக்குகள் தவிர்த்துக் கொள்ளப் படுகின்றன. இருப்பினும் இரு வெவ்வேறு சமயத்தவர்கள் திருமணமாகும் பொழுது பிரச்சினைகள் தோன்றுமாயின் இருதரப்பினரும் மனந்திறந்து பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும். தேவை ஏற்படின் சம்பந்தப்பட்ட கிறிஸ்தவ சபைத் தலைவர்களுடன் கலந்தாலோசித்து அவர்களது உதவியுடன் சமரசமான தீர்வுக்கு வரலாம்.

கிறிஸ்தவனுக்கும், கிறிஸ்தவன் அல்லாத பிற சமயத்தவனுக்கும் இடையில் ஏற்படும் கலப்பு மணங்கள் மிகவும் பிரச்சினையானவை. ஒருவன் அல்லது ஒருத்தி தனது சமயத்துக்கு வெளியே வேறொரு சமயத்தவனை அல்லது சமயத்தவளை விவாகஞ்செய்யும் பொழுது அவரவர் சமுதாயச் சூழலில் சமயத்தைப் பகிர்ந்து கொள்வதிலும், சமூகஉறவு முறைகளிலுமிருந்து விலக்கி வைக்கப்படுவது தவிர்க்கமுடியாததாயுமிருக்கும் கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை வேற்றுச் சமயத்தவர்களை மணந்தால் கலப்புச்சமய வழிபாட்டிலிருந்து விலக்கி வைக்கப்படுவதோடு கிறிஸ்தவர்களுக்குரிய எல்லா கிறிஸ்தவ வாழ்க்கைக் கண்ணோட்டத்திலும் அவர்கள் புறம்பாக்கப்படுகிறார்கள். ஒருவர் தனது சமயத்திலிருந்து தள்ளி வைக்கப்படுவதால் அவருக்கு ஏற்படும் தாக்கம், இழப்பு, வருத்தம் என்பன அவரவர் விசுவாச உறுதிப்பாட்டையும், நம்பிக்கை நிலைப்பாட்டையும் பொறுத்ததாயிருப்பதோடு அவரவர் மனநிலைகளையும் பொறுத்து வலுவுள்ளதாக, அல்லது வலுவற்றதாக இருக்கும். மேலும் இத்தாக்கம் வாழ்க்கைத்துணையின் மனோநிலைகளையும் அபிப்பிராயங்களையும் பொறுத்தே அமையும். இந்த உணர்வு முன்சொன்ன அடிப்படையில் சிலரிடத்தில் கூடி மிகுந்த பிரயாசையோ, ஏற்கமுடியாத நிபந்தனைகளில் விட்டுக்கொடுப்பதால் வரும் உடன்பாடுகளோ எதுவுமின்றியும் சிலரிடத்தில் குறைந்தும் காணப்படும். சமய வேறுபாட்டால் எழும் இடைவெளியை சமப்படுத்துவதற்கு ஏற்ற மனப்பக்குவமும் முதிர்ச்சியும் கணவன் மனைவிக்கு இருந்தாலுங்கூட; அவர்களது பிள்ளைகளை யாருடைய சமயத்தைப் பின்பற்றுவது என்ற விடயத்தில் பின்னர் பிரச்சினைகள் தோன்றலாம். தாயும், தந்தையும் ஒருமித்து ஒரு உடன்பாட்டுக்கு வருவதன் மூலம், சமயம் பற்றிய கருத்துவேறுபாடுகளுக்கு இடமின்றி பிள்ளைகள் எல்லோருமே ஒரு சமய அடிப்படையில் பயிற்றப்படுதலே கொள்கையளவில் சிறந்த முறையாகும். பிறக்கும் பிள்ளைகளில் சிலர் தாயின் சமயத்திலும், சிலர் தந்தையின் சமயத்திலும் பயிற்றப்படலாம் என்றோ, அல்லது பிள்ளைகள் எல்லோருமே வயது வந்த பின் தத்தமக்கு விருப்பமான சமயத்தைத் தழுவிக்கொள்ளலாம் என்றோ, கணவன் மனைவி இருவருமே விட்டுக்கொடுத்து ஒரு முடிவை எடுக்கலாம். அவ்வித முடிவு நியாயமானதும் திருப்தியளிப்பதுமான ஒரு முடிவாகத் தோன்றலாம். ஆயினும் உளவியலின் அடிப்படையிலும், சமய அடிப்படையிலும் நோக்குமிடத்து மேற்கூறிய முடிவு பிள்ளைகளுக்கு அதிக தீமையையே விளைவிக்கக் கூடியதாகவுள்ளது. இத்தகைய முடிவு பிள்ளைகளின் மனதிலே குழப்ப நிலையையும், சமயத்தில் அசிரத்தையையும், இறை இயல் பற்றி எதுவுமே தெரியாத தன்மையையும் அவர்கள் உள்ளங்களில் விதைத்து விடுவதாய் அமைந்துவிடும். எனவே மேற்கூறப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் முன்கூட்டியே நன்கு சிந்தித்து ஆராய்ந்த பின்னரே கலப்புமணம் பற்றி முடிவான தீர்மானத்துக்கு வரவேண்டும். குறிப்பிட்ட இருவரும் தத்தம் மதகுருமாருடனோ, திருமண ஆலோசகருடனோ நன்கு ஆலோசித்த பின்பே மண ஒப்பந்தஞ் செய்து கொள்வது நல்லது.

# தேவ அழைத்தல் தினத்தையொட்டி

## திருத்தந்தை அளிக்கும் செய்தி



வணக்கத்திற்குரிய ஆயர் சகோதரரே, அனைத்துலக அன்புமிக்க விசுவாசிகளே!

1. உயிர்ப்பின் 4 ஆம் ஞாயிறு வழமைபோன்று தேவ அழைத்தலுக்கான அனைத்துலக செபதினத்தை திருச்சபை கொண்டாட இருக்கும்வேளையில் இயேசுவின் ஆறுதலளிக்கும் உறுதி மொழிகளை நினைவு கூருவோமாக; மண்ணுலகில் உங்களில் இருவர் தாங்கள் கேட்கும் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால் அது விண்ணுலகிலுள்ள என் தந்தையால் அவர்களுக்கு அருளப்படும். இரண்டு மூன்று பேர் என் பெயரால் எங்கே கூடியிருப்பார்களோ, அங்கே அவர்கள் நடுவே நான் இருக்கிறேன். (மத். 18:19-20).

தேவ அழைத்தலுக்கு தம் வாழ்வை அர்ப்பணிக்கும் கொடைக்காக ''அறுவடையின் ஆண்டவரை'' இரந்து மன்றாட, ஆண்டவரின் பெயரால் முழுத்திருச்சபையும் வைகாசி 6 ஆம் நாள் ஒன்றுகூடுகிறது. குருக்கள்; தியாக்கோன்மார்; திருமடசார்புள்ள ஆண்கள், பெண்கள்; பொதுநிலையினர்; பங்குஅங்கத்தவர்கள்; குழுக்கள், கூட்டங்கள், இயக்கங்களைச் சார்ந்தோர் ஒன்றுகூடி திருச்சபைக்கு புதிய அழைத்தல்களை அளித்து சிறப்பாக்கிட வேண்டுமென்று இறைவனை இறைஞ்சுவர்.

ஒன்றுபட்ட மன்றாட்டு தாராளமாகக் கேட்கப்படும் என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன். எனினும் தனிநபரினதும், சமூகத்தினதும் தேவ அழைத்தலை நோக்கிய ஆற்றலான செயல்கள் எமது செபங்களுடன் இணையவேண்டிய அவசியத்தை நினைவூட்ட விரும்புகிறேன். ஆண், பெண் பாலாரின் வாழ்வும், செயல்பாடுகளும், குறிப்பாக திருச்சபையில் இன்று தமது வாழ்வை அர்ப்பணித்து கிறிஸ்துவைப் பின்பற்றுவதில் இன்பமாய் வாழ்வோரின் சாட்சியமுமே இறை அழைத்தலின் சாதாரண தூண்டுதல் காரணிகள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

தேவ அழைத்தல்களுக்கு ஊக்கம் கொடுக்கவேண்டுமென்ற இவ்வகையான மனவுறுதியின் ஒளியிலும், மேலும் நிகழவிருக்கும் ஆயர்சபையின் அமர்வில் ''தற்காலச் சூழ்நிலையில் குருத்துவ உருவாக்கல்'' என்னும் பொருளை ஆராயவிருப்பதாலும், அழைத்தலின் ஆரம்பத்திற்கும், வளர்ச்சிக்கும் ஆன்மீக வாழ்வின் அக்கறை உயிரூட்டமுள்ள செயல்பாடுடையது என்பதை எல்லா இறைகுல மக்களினதும் சிறப்பாக உருவாக்கலுக்கும் பொறுப்பாகவுள்ளோரினதும் கவனத்திற்கும் கொண்டுவரவும் விரும்புகிறேன்.

எவ்வகையான அழைத்தலாயினும் பூரணமான அழைத்தலாக முதிர்வதற்கு உறுதியான சக்திவாய்ந்த ஆன்மீக வாழ்வின் யாத்திரை தேவைப்படுகின்றது; தேவ அழைத்தல் என்னும் ''விதை'' நாட்டப்பட்டு வளர்ந்து முதிர்ச்சியடைய நிச்சயமான ஆன்மீக வாழ்வு அவசியமான ''நல்ல நிலம்'' (மத். 13:23) போன்றது.

2. இரண்டறக் கலந்து இறைவனில் சங்கமமாவதே ஒவ்வொரு ஆணினதும், பெண்ணினதும் அடிப்படை அழைத்தலாகும். ''இறைவனின் சாயலாகவும் பாவனையாகவும்'' (ஆதி. ஆக. 1:26-27; ஞான ஆக 2:23; சீராக். 17:3, 1கொரி 11:7) நாம் ஒவ்வொருவரும் படைக்கப்பட்டுள்ளோம்; இறைவனோடு நெருங்கிய பிணைதலையும் பிள்ளைக்குரிய பாசத் தொடர்பையும் நடைமுறையாக்க கிறிஸ்துவில் அழைக்கப்படுகிறோம்.

இவ் அடிப்படையான தேவ அழைத்தல் நிறைவேறுவதற்காக இறைவாழ்வின் பங்கு எல்லா ஆண்களுக்கும், பெண்களுக்கும் அருளப்படுகின்ற தனித்துவமான ஒத்துணர்வு புனிதமாகும் போக்கை ஆரம்பமாக்கி 'புதியதொரு படைப்பு' (2 கொரி. 5:17; கலா 6:15) உருவாக்கப்பட்டு, இறைவனின் மறைபொருளானவற்றை அதிகம் அதிகம் பெறவும், அறியவும் தகுதி பெற்று (1 கொரி 2:9 14; 6; 17; உரோ, 8:14-16; கலா 4:6) அவருடைய அன்பின் கொடையில் நிறை இன்பம் அடைவர்.

திருமுழுக்கின் அழைத்தலைத் தொடர்ந்து பிரத்தியேக வாழ்வைப்பின்பற்றுவதே தனித்துவமான அர்ப்பணிக்கப்பட்ட தேவஅழைத்தலாகும். திருமுழுக்கில் பெற்ற ஆன்மீக வாழ்வு இடைவிடாத பராமரிப்பினால் ஊட்டம் பெற்று, வளர்ந்து, கனிகொடுக்கும் பருவத்தையடைகிறது. ஆன்மீக வாழ்வு நிறைந்த அபிவிருத்தி அடையவும், சிலவேளைகளில் இறைவனின் மகிமைக்கும், அயலவரின் சேவைக்கும் தம்மை முற்றாகக் கையளிக்கும் தெரிவிற்கு வழிகாட்டக்கூடிய முறைகளை, பராமரிப்பினை உறுதிப்படுத்தும் முறைகளை மேலோகாணவும்.

இறைவார்த்தையினை நுணுக்கமாக அவதானிப்பதால் கிறிஸ்துவைப் பின்பற்றுவதில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய தெரிவுகளுக்கு தெளிவான உதவி கிடைக்கும்;

திருவருட்சாதனங்களில் குறிப்பாக ஆன்மீக வாழ்வின் அவசியமான அச்சாணிபோன்றதும், எல்லாவிதமான அழைத்தல்களுக்கும் ஊற்றும் உறைவிடமுமான நற்கருணை விருந்தில் ஊக்கமாகப் பங்குபற்றுவதால்;

இதயத்தை முழுமையாக மனம்மாறச் செய்ய ஊக்கமளித்து, இறைவனின் திட்டத்தின்படி தம்மை அர்ப்பணிக்க இதயசுத்தியை அளித்து கிறிஸ்துவின் ஒன்றிப்பில் உறுதியான பிணைப்பை ஏற்படுத்தக்கூடிய ஒப்புரவு அருட்சாதனம்;

எப்பொழுதும் ஒருவரை இறைவனின் பிரசன்னத்தில் வாழச்செய்யும் தனிப்பட்ட செபம்; திருமுழுக்குப் பெற்ற அனைவரையும் திருச்சபையின் பொதுச்செபத்துடன் இணைக்கும் வழிபாட்டுச் செபம்;

இறை சித்தத்திற்கு அமைவதே ஆன்மீக முதிர்ச்சியின் ஆரம்பம்: இறைச்சித்தத்தை தகுந்த முறையில் இனம்கண்டு கொள்ள ஆன்மீக நடத்துனரின் வழிகாட்டுதல்;

மரியாளின் மேலுள்ள பிள்ளைக்குரிய அன்பு ஒவ்வொரு கிறிஸ்தவனின் ஆன்மீகத்தினதும், அழைத்தலினதும் வளர்ச்சியின் மங்காத அறிகுறியாகும்.

இறுதியாக, எம்மை அழைக்கும் இறைவனுக்கு நாம் செவிமடுக்கும் பொழுது, நலனுள்ள, நிதானமான பழக்கம் மூலமாகவே பல தியாகங்கள், ஒறுத்தல்கள் இடம்பெறவேண்டுமாதலால், சந்நியாச நிலைக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாய் இருத்தல் வேண்டும்.

4. சகல கிறிஸ்தவ கல்விப் பணி புரிவோரையும் அதாவது பெற்றோர், ஆசிரியர், மறையாசிரியர், திருச்சபையின் கூட்டங்களினதும், இயக்கங்களினதும் இயக்குநர்கள் ஆகியோர் இடைவிடாது கவனமாகத்தங்களால் இயன்ற அத்தனை வழிகள் வழியாக இளம் சமுதாயத்தினர் திருமுழுக்கின் மூலமாகப் பெற்ற கொடையாகிய இறைவாழ்வின் வித்தைப் பேணிப்பாதுகாக்க அழைப்பு விடுக்கின்றேன், கல்வியின் எல்லா வகையான திட்டங்களிலும் ஆன்மீக வாழ்விற்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்; அதன் முழுமையான வளர்ச்சியின் சார்பாக உள்ள உபாயங்கள் யாவும் காண்பிக்கப்பட்டு விளக்கமும் அளிக்கப்படவேண்டும்.

கிறிஸ்தவ சமுதாயத்திற்கு பொறுப்பாக இருப்போரை குறிப்பாக பங்குத்தந்தையரிடம் நாம் கூறும் புத்தமதியானது; அருள்வாழ்வின் கலப்படமற்ற மூலாதார உணவினால் இறைவனின் மந்தைக்கு உணவூட்டுங்கள்.

அர்ப்பண வாழ்விற்கு அழைக்கப்பட்ட ஆண்களையும், பெண்களையும் உருவாக்கும் பாரிய பொறுப்பினையுடையோராகிய குருமடங்களின் அதிபர், ஆன்மீக நடத்துனராகிய அருட்தந்தையர், ஆசிரியர், இந்த நுட்பமான பொறுப்பில் பங்குகொள்ளும் ஏனையோரையும் நோக்கி நான் தனியான வேண்டுதல் விடுக்கிறேன். நீங்கள் மேற்கொள்ளும் உருவாக்கலில், ஆன்மீக வாழ்விற்குத் தனிச்சலுகை அளிக்க உங்களால் இயன்றவாறு நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

5. இறுதியாக, குழந்தைகள், வாலிபர், இளைஞர்களுடன் நேரடியாகவும், தனிமையாகவும் பேச விரும்புகிறேன்.

திறந்த உள்ளத்துடன் கிறிஸ்துவை சந்திக்கச்சென்று அவருடைய நீரூற்றில் உங்கள் தாகத்தைத் தணியுங்கள். நீங்கள் தேடித் தவிக்கும் உண்மை, இன்பம், மகிழ்ச்சி, அன்பு ஆகியவற்றை திருப்தி செய்யும் நீரை அவர் உங்களுக்குச் சமர்பிக்கிறார்; அவர் கொடுக்கும் நீர் உங்களுடைய அளவற்ற நித்திய தாகத்தைத் தீர்க்கும் ''முடிவில்லா வாழ்வடைய பொங்கியெழும் ஊற்று'' (அருள் 4 : 14).

கிறிஸ்துவிற்கு செவிசாயுங்கள்: நம்பிக்கைக்கு உங்கள் இதயங்களைத் திறந்து விடுவார். கிறிஸ்துவைப் பின்பற்றுங்கள்: அவரே ''உலகின் ஒளி'', 'அவரைப் பின்செல்பவன் இருளில் நடவான், ஆனால் உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான்'' (அருள். 8 : 12).

கிறிஸ்தவ அழைத்தலின் அழகை மீண்டும் கண்டுபிடித்து உங்களுடைய திருமுழுக்கின் அர்ப்பணத்தை உறுதிப்படுத்துங்கள்; ''புத்துயிர்'' (உரோ. 6 : 4) பெற்றவர்களாய் நடப்போம் என்று கூறிய வாக்குத்தத்தத்தைப் புதுப்பியுங்கள்; நீங்கள் மிகுந்த கனி தரும்படியாக, கிளையானது திராட்சைக் கொடியில் நிலைத்திருப்பதுபோல, கிறிஸ்துவில் நிலைத்திருங்கள். (அருள். : 15) திருச்சபையின் தேவைகளை நீங்கள் உங்களின் தேவைகளென கணித்து உணர்ந்து கொள்ளுங்கள்; இறை அருளின் தூண்டுதல்களுக்கு அமையுங்கள்; இறை அன்பிற்கும், அயலவனின் சேவைக்குமென உங்களை முழுமையாக அர்ப்பணித்து கிறிஸ்துவோடு மிகவும் நெருங்கிய நிலையில் அவரைப் பின்பற்ற ஆண்டவரால் அழைப்புப் பெற்றால் தாராள மனத்துடனும், ஆவலுடனும் பதில் கொடுப்பீர்களாக.

6. நாம் ஒன்றுபட்டுச்செபிப்போமாக:

உண்மையின் ஆவியே, எம்மை இறை வார்த்தையின்

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

# இயக்குநரின் செய்தி

அன்பர்களே!

தேவ அழைத்தலுக்கான 27 ஆவது உலக செபதினம் மே மாதம் 6 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.

''அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு. ஆதலால் தம் அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றாடுங்கள்'' (மத். 9: 38, லூக். 10: 2) என்று கூறிய எம்பெருமான் இயேசுவின் பொன்மொழிகளுக்கிணங்க. தேவஅழைத்தல் எம்மத்தியில் பெருகிட இறைவனை இறைஞ்சுவோமாக; விசுவாசமும், இறையருளும் தேவஅழைத்தலுக்கு மிகவும் வேண்டியவை என்பதை உணருகிறோம்.

திருப்பலி, செபவழிபாடு, குடும்பத்திருவிழிப்பு போன்றவற்றின் வழியாக தேவஅழைத்தல்களை ஊக்குவிப்பது. குடும்பங்கள், பங்குகள், பாடசாலைகள், பக்திச்சபைகளில் விசேட நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வது மிகவும் பாராட்டிற்குரியவையாகும்.

தேவ அழைத்தலுக்கான செபதினம், பாஸ்காவின் 4-ம் ஞாயிறு. ஆயினும் ஒரு கிழமைக்கு அல்லது ஒரு மாதத்திற்கு அல்லது பரிசுத்த ஆவியின் திருவிழா வரைக்கும் நீடிக்கப்படலாம்.

தற்காலச் சூழலில் ''குருத்துவ உருவாக்கல்'' குறித்து



ஆயர் அவை அமரவிருப்பதால் இவ்வருட தேவ அழைத்தல் தினம் தனியிடத்தை எடுக்கிறது.

நாம் ஆற்றிவரும் நற்செய்திப்பணி, வழிபாட்டுப்பணி, மனிதநேய சேவை ஆகிய முப்பணிகளைத்தொடர்ந்து ஆற்ற பலர் தேவைப்படுகின்றனர். பல்வேறு முறையான தேவ அழைத்தல்களுக்கு எம்மவர் விடை பகர ஓர் சந்தர்ப்பம் அளிப்போமாக!

ஆலயத்திருவிழாக் காலங்களில் தேவ அழைத்தல் தினம் ஒன்றை ஆயத்தம் செய்து வெவ்வேறு துறவற சபைகளையும், குறிப்பாக எமது மறைவட்டத்தில் பணியாற்றுவோரையும் அழைத்து தேவ அழைத்தல்கள் பெருக வழி வகுக்கலாம்.

இறையாசீரை வேண்டி நிற்கும்,

அருட்திரு. ம. இ. பயஸ்.
தேவ அழைத்தல் இயக்குநர்.

Branch Library

# வெள்ளை றோஜா

## சிறுகதை

புலர்ந்தும் புலராத அதிகாலைப் பொழுதினில் லூசியா மெல்ல படுக்கையை விட்டு எழுந்து காலைச் செபத்தை சொல்லி முடித்தபின் பூசைக்கு வெளிக்கிட ஆயத்தமானாள். லூசியாவின் தாய் கோப்பியைக் கொண்டு வந்து கொடுத்தாள். ''வேண்டாமம்மா, சிறு ஒறுத்தலாக கோப்பியைக் குடிக்காமல் பூசை காண்பேன்'' என்று புன்னகைத்தாள் லூசியா, தாய் பெருமிதத்துடன் சிரித்தாள். லூசியா தேவாலயம் நெருங்குமட்டும் செபமாலை சொல்லிக்கொண்டே போனாள். பூசைப்பலி நடக்கும்போது தன்னையே மறந்து விடுவாள், இயேசுவின் அருகில் தான் இருப்பதுபோல் அவளுக்கு ஓர் உணர்வு ஏற்பட்டது. தான் ஒரு கன்னியாஸ்திரியாகப் போக வேண்டும். என்ற ஏக்கம் அவள் மனதை வாட்டிக்கொண்டேயிருந்தது. சிலுவையைப் பார்த்து இரு கரம் ஏந்தி ''யேசுவே! உமது திரு இரத்தத்தின் குரலொலியால் உம்மை இடைவிடாது இரந்து மன்றாடிப் பிராத்திக்கிறேன். நீர் எமது மன்றாட்டை ஏற்காததுபோல் தோன்றினும் நீர் எனது வேண்டுதலைக் கேட்கும்வரை உமது ரத்தம் கசியும் பாதங்களை விட்டு அகலேன்'' என்று கண்கள் கலங்க மனம் வருந்த மன்றாடுவாள். பூசை முடிந்து வீடு வந்து தாய்க்கு உதவிகளைச் செய்து கொடுத்தபின் பாடசாலை சென்று விடுவாள். லூசியா பாடசாலையிலும் அவள் அதிகம் கதைக்க மாட்டாள். அமலா என்ற பிள்ளையுடன் மட்டும் மனம் திறந்து பேசுவாள், அமலா தினமும் பூசைக்கு வருவதால் அவளிடமும் ஓர் ஈடுபாடு இருந்தது. லூசியாவிடம் அமலா வந்து லூசியா நாளைக்கு சனிக்கிழமை தானே' காலையில் கடற்கரைக்குப் போய் சூரியன் உதிக்கும் காட்சியைப்பார்ப்போமா?'' என்றாள். காலை பூசைமுடிந்தபின் அம்மாவிடம் கேட்டு விட்டு வருகிறேன் என்றாள் லூசியா. மறுநாள் அமலா தன் தந்தையுடனும், தம்பியுடனும் லூசியா வீட்டிற்கு வந்தாள். லூசியாவும் தாயிடம் விடைபெற்றுக் கொண்டு அவர்களுடன் புறப்பட்டாள். அவர்கள் கடலை நெருங்க, நெருங்க குளிர்ந்த தென்றல் ஆனந்த ராகம் பாட எங்கோ போவது போல் போய் மீண்டும் கடலைச் சுற்றியே அற்புத நடனமிட்டது. கிழக்கு வானம் மெல்ல, மெல்ல சிவக்கத் தொடங்கியது. அமலாவின் தந்தையும், தம்பியும் சற்றுத் தொலைவில் நின்று கடலழகை ரசித்துக் கொண்டிருந்தார்கள். கடலலைகள் ஒரே இரைச்சல், ஒரே ஆரவாரம். அமலாவும், லூசியாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். இருவர் முகத்திலும் சந்தோஷப் புன்னகை. ''பார்த்தாயா அமலா? இறைவனின் அற்புதப் படைப்பை'' என்று வியந்தாள் லூசியா. பின்பு அவர்கள் வீட்டையடைந்தார்கள். அன்று லூசியா தன் தாயிடம் தன் விருப்பத்தைக் கூறினாள். ''அம்மா நான் கன்னியாஸ்திரியாகப் போக விரும்புகிறேன்.'' என்றாள். லூசியாவின் தாய் மிகவும் அமைதியுடன் 'ஆண்டவருக்கு நன்றி'' என்றாள். ''மகளே! நீ எனக்கு ஒரே பிள்ளை. உன் தந்தை இறந்தபின் உன்னை மிகவும் கஸ்ரப்பட்டு வளர்த்தேன். கஸ்ரத்திலும் கடவுள் பக்தியை உனக்கு ஊட்டி வளர்த்தேன். நீ இல்லறத்தை நாடுவியோ, துறவறத்தைத் தேடுவியோ; அதெல்லாம் உன் மனதைப் பொறுத்தது. ஆனால் மகளே! நீ செல்லும் பாதையில் கல்லும், முள்ளும், குன்றும் குழியும் தோன்றுமே நீ, என்ன செய்வாய். மகளே! என்றாள் தாய். ''என்னம்மா நீங்களா இப்படி சொல்லுகிறீர்கள்? செபமாலையும், பைபிளுமாக இருக்கும் உங்கள் வாயால் இந்த வார்த்தை வரலாமா? செபமாலையும், பைபிளும் கையில் எடுக்காத தாய்மார் தங்கள் பிள்ளைகளுக்கு எப்படி அறிவுரை வழங்குவார்களோ தெரியாது'' என்றாள். லூசியா சற்றுச் சலிப்புடன் ''அம்மா! இயேசு பிரான் எங்களுக்காக எவ்வளவு துன்பப்பட்டார்? எவ்வளவு கொடிய வேதனையை சந்தோஷத்துடன் தாங்கிக் கொண்டார்? நான் சிறு வயதிலேயே மனதால் கஸ்ரப்பட்டு வளர்ந்தவள். எனக்குக் கல்லும், முள்ளும். குன்றும் குழியும் பெரிதல்ல'' என்று உறுதியாகக் கூறினாள் லூசியா. தாயுள்ளம் ஆனந்தத்தால் அக்களித்து நின்றது. மகளைக் கட்டித் தழுவி முத்தமிட்டாள். லூசியாவின் மனதில் உற்சாகம் பிறந்தது. லூசியா தனது மனக் குறைகளை தேவாலயத்தில் இருக்கும் இயேசுவிடம் முறையிடுவாள், அன்று தேவாலயத்தில் செல்லும் வழியில் ''அமலாகுறிக்கிட்டாள் என்ன லூசியா கோயிலுக்கா போறீர்?'' என்றாள். ஆமாம்; என்று தலையசைத்தாள் லூசியா. ''லூசியா நான் உம்மிடம் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன் குறை நினைக்க மாட்டீரே,'' என்றாள் அமலா. ''தாராளமாய்க் கேளும்'' என்றாள் லூசியா. ''நீர் படித்த பிறகு பிற்காலத்தில் என்ன தொழில் செய்ய விரும்புகிறீர்'' என்றுகேட்டாள் அமலா. ''என் மனதுக்குள் சேவையென்ற வெண்புறா சிறகடித்துப் பறந்தது. ஆண்டவன் சன்னிதானத்தில் என்னை ஒப்படைத்து விட்டேன். ''அமலா? ஏழைகளின் சிரிப்பில் இன்பத்தைக் காண்பேன், வெள்ளையுடைபோல் என் உள்ளத்தையும் வெள்ளையாக்கி கள்ளமில்லாமல் எல்லோரும் ஒரு தாய் மக்கள் என எண்ணி வாழ்வேன். ''சரி லூசியா; உமது சேவை தொடர எனது வாழ்த்துக்கள். ஆண்டவனின் ஆசீர்வாதம் என்றும் உம்மோடு இருப்பதாக'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டாள் அமலா, தேவாலயத்துக்குள் நுழைந்த லூசியா முழந்தாள் படியிட்டு மன்றாடினாள். 'சிலுவையில் உயிர்விட்ட இயேசுபிரான் நடந்த பாதையில் நானும் துணிவுடன் நடப்பேன். அதற்கு ஆண்டுகள் பல கடந்தாலும், சேவை செய்யும் மனதை மாற்றவே மாட்டேன். எனது கண்கள் பீடத்தில் அழகுற வைத்திருந்த வெண்ணிற றோஜாக்களைக் காண்கிறது. அதில் இயேசுவின் முகம் தெரிகிறது. நான் கன்னியாஸ்திரியாக வரும் நாள் எப்போவரும் என்று ஆவலுடன் அந்த றோஜாமலர்களைப் பார்க்கிறேன்.'

(யாவும் கற்பனையல்ல)

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

P. மெரின் டிசாந்தா
கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

## உன்சேவை உலகிற்குத் தேவை

உன்சேவை உலகிற்குத் தேவை—இதை
உணர்ந்திடுவாய் இளைஞனே! நீ!
அன்பின் உருவாம் இயேசுவின்—நல்
அருமை மதத்தைப் பரப்பிடவே
இன்றே நீயும் புறப்படுவாய்!—நல்
இனிய சேவை செய்திடவே!
என்றும் இறைவனின் அருள்பெற்று—நீ
எல்லையிலா நலன் பெறுவாய்!
பாவிகளை மனந் திருப்பி—இப்
பாரினில் அவர்களைத் தேவனின்
ஆவியால் மகிமைப்படுத்தி - நல்
அன்பை அவர்மனதே புகுத்தி
நாவினால் நற்சொல் நவின்று—இயேசுவின்
நற்செய்தியதனை எத்திசையும் சாற்றிட
தேவன் இயேசுவின் அழைப்பையேற்று நீ—இன்றே
தேவஊழியம் செய்யப் புறப்படுவாய்!

A. யோகவதி, பெரியநீலாசேனை, உயிலங்குளம்.

மக்கள் குரல்

# செபவீடு என்பது நினைவில்லை

''இது என் செபவீடு'' என்று சினந்து அன்று சிதற அடித்தார் இயேசு. அன்று இருந்தவர்களுக்காக மட்டுமல்ல, இன்றும், என்றும் இருப்பவர் எல்லோருக்குமாகவே சொன்னார் அவர். யார்தான், எதைத்தான் கடைப்பிடிக் நினைக்கிறோம்.

கலை என்ற பெயரில் கடவுளை மறப்பதை எப்படி அனுமதிக்க முடிகின்றது?

கோவில் முன்றலிலும், ஜெபக் கூடங்களின் அருகாமையிலும் கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

அதற்கான அலங்காரங்கள் ஜோடனைகள் எங்கே செய்யப்படுகின்றன? வெளிப்புற கூடாரங்களிலா?

ஆலயத்தினுள்ளே!
என்னே பரிகாசம்!!

தேவநற்கருணை இருப்பதும் நினைவில் இல்லை. இருப்பீடம் என்பது மனதில் இல்லை. சொரூபம் உள்ள திட்டியில் நாட்டியப்பெண் உடைமாற்றி ஒப்பனை, அலங்காரம். வியாகுல அன்னையின் அருகில் குறத்திவேடப் பெண்களின் ஜோடனை, நடுக்கோவிலினூடே நட்டுவாங்கக்காரரின் நர்த்தனங்கள் பீடத்தண்டையில் நாடக வல்லுனர்களின் நாட்டாண்மை.

பார்த்தால் ஆலயம் தெரியவில்லை. கலையரங்கம்தான் தெரிகிறது. ஆக பூசைப்பலியின் போது மட்டுமே கோவில் என்ற பரிசுத்தமான இடம்தெரிகிறது. பலி முடிந்ததும் அது வெறும் பள்ளிதான்.

இந்த நிலையில் வைத்திருப்பதால்தான், பிரிந்து நின்று திரித்துக்கூறி எதிர்வாதம் செய்யும் போலிகள் கேலி செய்கின்றனர், கேலியோடு மட்டுமல்ல, நியாயமான கேள்வியும் கேட்கிறார்கள்.

எதற்கும் ஒரு விதிமுறை, வரையறை, ஒழுங்கு உண்டு என்பதை மறக்காமல் எதை, எதை எப்படி காக்கவேண்டும் என்பதை மனதில் கொண்டு நாம் கலைகளை வளர்க்க முற்படவேண்டும்.

சௌ— ஜெயமணி.

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு — 64

அந்தோனி: வேலை கூட, வேலை கூட எண்டு எங்கட கோயிலுக்கு சுவாமி ஒரு மாதத்தில ஒருக்காத்தான் வாறர் அண்ணை! ஏன் எங்களுக்கு எண்டு தனிய ஒரு சுவாமி வைச்சா என்னண்ணே ?

குருசு: எட தம்பி! உன்ர ஊரில் இருந்து எத்தனை பேர் சுவாமியாய், சிற்றராய் போயிருக்கினம்? ஏன் உன்ர குடும்பத்தில உள்ள ஐந்திலையும் எப்ப உழைச்சுப் சாப்பிடுவம்' வெளிநாட்டுக்கு அனுப்புவம் எண்டு இருக்கிறாய்? ஒண்டையாவது துறவறத்தில் அனுப்ப யோசிச்சியே பின்ன......

அந்தோனி: அதுக்குத் தான் பலபேர் அனுப்பிக் கொண்டு இருக்கினம் தானே அண்ணை!......

குருசு: எட தம்பி! ஆரும் அனுப்புறத சொல்லுறாய். முந்தி பத்தில் ஒண்டு, இப்ப பதில் ஒண்டல்லோ இந்த சேவைக்கு செல்லினம, அடுத்த வீடடப் பார்க்காம நீங்களும் அனுப்பினா பிள்ளையளை தூண்டினா, மாதத்தில் என்ன, ஒவ்வொரு நாளும் உங்கட கோயிலில் பூசை, பிரார்த்தனை சேவையள் பெருகும் பாரு.

## குருத்துவம் பொங்கியெழட்டும்...

இறைவனின் அழைப்புகள் எங்குமே
இசுமாய் எழுவது கேளீரே!
மறையவன் பணிதனை ஆற்றிடவே
மகிழ்வுடன் புறப்படும் குருக்கொழுந்துகளே!......

மனிதாபிமானங்கள் மடிந்திடும் மண்ணில்
வெற்றுவார்த்தை வேடிக்கை தவிர்த்து
புனிதமான பணியிலே நீங்கள்
புதைந்து வாழவே முனைந்திடுவீரே!......
விமர்சனங்கள் எங்குமே உண்டு.
விபரீதங்களும் இங்கும் உண்டே;
மதியீன செயல்களைக் கண்டு தயங்கிடாது.
துணிவுடன் முகம் கொடுத்து வாழ்ந்திடுவீர்!......

குருத்துவம் ஒரு பிழைப்பு என்றே
குறையாத விமர்சனம் எங்குமே,
குருத்துவம் தெய்வீக உழைப்பு என்றே
குவலயம் எங்கும் செயற்படுவீர்!......

அன்பங்கள் துடைத்திட வேண்டும்,
துன்மார்க்கங்கள் சிதைத்திட வேண்டும்.
குறையறப்பணி செய வேண்டும்.
குருத்துவம் உம்மில் பொங்கிட வேண்டும்!......

எஸ். நிலான்

# அருள்வாக்கு அறிவோம்

## நற்செய்திக்கோர் பின்னணி — (11)

### மாற்கு நற்செய்தி நூலின் பிரிவுகள் — (இ)

மெசியா மர்மம்:

வாசகர்களே! நூலின் முற்பகுதியில் இயேசு யார்? என்பது ஒரு மர்மமாகக் காட்டப்படுவதாக சென்ற இதழில் பார்த்தோம். நூலின் பிற்பகுதியில் இயேசு மக்களின் கூட்டத்தைவிட்டு ஒதுக்கமாகச் சென்றார் என்றும் (7:24;9:30) சீடர்களுக்கு மட்டும் தனியாக அறிவுரை கூறுகிறார் என்றும் (4:10-12;7:17-23;9:28;8:31;9:31;10:33;13:37) குறிப்புகள் காணப்படுகின்றது. தன்னைப்பற்றி, தான்செய்வது பற்றிய செய்தியை இயேசு இவ்வாறு மூடி மறைத்து மர்மமாக வைத்ததன் நோக்கம் என்ன? இதுபற்றி பல ஆண்டுகளாக அறிஞர்களால் ஆராய்ச்சிகள் பல நடத்தப்பட்டன. இயேசு மெசியா என்ற செய்தி அவர் உலகில் வாழ்ந்தவரை யாருக்கும் தெரியவில்லை என்பவர் சிலர். நாட்டில் திடீர் புரட்சி வெடித்துவிடக் கூடாது என்பதற்காக இப்படி மூடி மறைக்கப்பட்டது என்பர் சிலர். மூடிமறைப்பதன் மூலம் 'மெசியா' என்ற வெளிப்பாட்டின் அறியாத்தன்மை சரியாகச் சுட்டிக்காட்டப்படவும், இனனும் விரைவாகப் பரவவும் வகை செய்யும் என்ற நம்பிக்கையில் இவ்வாறு மறைக்கப்பட்டது என்பர் இன்னும் சிலர்.

அருங்குறிகளை ஆற்றுதல், பேய்களை ஓட்டுதல், நற்செய்தியைப் போதித்தல் மெசியாவின்பணி பெருமைக்காகவும் புகழுக்காகவும் அல்ல எனவே விளம்பரம் அவசியம் இல்லாதது என்று இயேசு விரும்பினார் என்பது ஓரளவு நியாயமான விளக்கமாகத் தோன்றுகின்றது. ஆசிரியர் காலத்தில் ஒருசிலவட்டாரங்களில் இயேசுவின் அதிகாரமுள்ள போதனையும், ஆற்றல் மிக்க செயல்களும் பற்றிய செய்திகள் அதிகமாக நிலவியதால் இயேசு வித்தைகள், புதுமைகள் செய்யும் ஒரு கடவுள் மனிதன் என்ற கருத்து நிலவியது. சில வட்டாரங்களில் இயேசுவின் மனிதத்தன்மை, குறைகள், குறைபாடுகள் மிகைப்படுத்தப்பட்டு காட்டப்பட்ட காரணத்தால் அவருடையதெய்வீகத்தன்மை மங்கி மறையும் அபாயம் நிலவியது. ஆசிரியர் காலத்தில் இருந்த இந்தத் தவறான போக்குகளை இயேசுவின் காலத்தில் புகுத்தி இயேசுவின் தெய்வ மனித இயல்பு, ஆற்றல்மிக்க காரியங்கள், பாடுகள் எல்லாவற்றையும் அளவாக முறைப்படுத்தி வடித்துத்தர ஆசிரியர் மேற்கொண்ட ஒரு இலக்கிய மரபே இந்த மர்மம் என்ற விளக்கம் இன்று பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

தொடர்ந்து பார்ப்போம்......

எஸ். அந்தோனிப்பிள்ளை

# தேவ அழைத்தல்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்கூடங்களாக உருவாக்குவதற்காக பரிசுத்த ஆவியின் நாளாகிய அன்று எம்மேல் உதயமனீரே, திருமகன் உமமை அனுப்பிய திட்டத்தை எம்முள் நிறைவு செய்வீராக.

சகலஇதயங்களையும்நிரப்பியருளும்; வாழ்வின் போலியற்ற நன்மையையும், அழகையும் அடையும் ஆவலையும் நற்செய்தியின் வழியிலான புனிதத் தன்மையை நாடும் விருப்பத்தையும், ஆன்மாக்களின் மீட்பில் தணியாத தாகத்தையும் எமது இளைஞர் பலருக்கு அளித்தருளும்.

"ஆண்டவரின் வேலையாட்களை" நிலை நிறுத்தி அவர்களின் முயற்சிகள் அதிகம் ஆன்மீக கனி கொடுத்திட அருள் புரியும்.

எமது இதயங்களை முழுமையாகத் திறந்து தூயதாக்குவதால் நாம கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை மேலும் நிறைவாகப் பின்பற்றி, உமது இறுதியான உன்னத கொடையாகிய முடிவில்லாப் பேரின்பத்தை அடையச் செய்தருளும் ஆமென்!

வணக்கத்துக்குரிய ஆயர் சகோதரரே, குருக்களே, இயாக்கோன் ஊழியரே, துறவிகளே, எல்லாப் பொது நிலையினரே! குறிப்பாக தம்மைப் பின்பற்ற அழைப்பு விடுக்கும் இயேசுவின் குரலோசைக்கு தாராளமாக செவிசாய்க்கும் இளைஞரே! யுவதிகளே! நிறைந்த இதயத்துடன் உங்களுக்கு அப்போஸ்தொலிக்க ஆசீரை வழங்குகிறேன்.

திருத்தந்தை
2ம் அருள் சின்னப்பர்
வத்திக்கான்

## பாஸ்கா கால 4ஆம் ஞாயிறு
## 6-5-1990
## தேவ அழைத்தல் தினம்

# பழமொழி ஆகமமும் முதுமொழியும்

வாசக நேயர்களே!

"சிந்தித்து செயற்படு" என்றார்கள் ஆன்றோர்கள். சிந்தியாமலும்-திட்டமிடாமலும் தகுந்த ஆலோசனையாளர்கள் இல்லாமையினாலும் நாமும் எமது இனமும் இன்றுவரை பட்ட கஷ்டங்கள் இப்போது புரிந்ததல்லவா? இதை ஓரளவு சிந்தித்தவர்களால் இன்று எமது நாடு ஓரளவு அமைதியில் சென்றுகொண்டிருப்பதை தற்போது காணுகின்றோம். இந்த அமைதி நீடிக்க வேண்டும் என்பதே எம் எலலோரினதும் அபிலாஷைகள்.

இன்று நாம் சிந்திப்பதை என்றோ கூறிப்போந்தார் திருநூல் ஆசிரியர்.

சிந்தனைகள் ஆலோசனைகளால் உறுதிப்படுத்துகின்றன. போர்களையும விசாரணைக்குப் பின்னரே நடத்த வேண்டும்" என்று 20/18-ல் கூறியவற்றை இன்றும நாம் சிந்திக்க வேண்டுமல்லவா! எவ்வளவு பொருத்தமான வார்த்தைகளை திருநூல் இன்றும் எமக்குத் தருகின்றது.

உணர்ச்சி வசப்பட்டு எடுக்கும் முடிவுகள் உதவாதுதானே. முதுமொழியாளரும், "கண்ணால் காண்பதுவும் பொய், காதால் கேட்பதுவும் பொய், தீர விசாரிப்பதே மெய்" என்றார்கள்.

அடுத்து ஒன்றைக் கவனியுங்களேன......... "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் உறவு கலவாமை வேண்டும்" என்றான் கவிஞன். அரசியல்வாதிகளால் ஏமாற்றப்பட்டு-போலி வாக்குறுதிகளுக்கும்-பொய்ப்பிரசாரங்களுக்கும் நம்பிக் கெட்டவர்கள் தானே நாங்கள?

'அரசியலும்-வியாபாரமும் பொய்யில்லை என்றால் நடக்காது" என்றார்கள் முன்னோர். திருநூல் ஆசிரியரும் 20/19-ல் 'இரகசியத்தையும் வெளியாக்கி-வஞ்சகமாய் நடந்து, தன் உதடுகளையும் அகலத் திறக்கிறவனுடன் பழக்கம் வைத்துக் கொள்ளாதே? என்று அரசியல்வாதிகளையும அலசுகின்றார் ஆசிரியர்.

இறைவார்த்தை தரும் ஒவ்வொரு சிந்தனையையும், இதயத்தில் ஏற்கப் பழகிக் கொண்டால் நாமும் வாழ்வோம்-நாடும் வாழும்.

சிந்திப்போமா!

அன்புடன்
எஸ். ஏ. நாதர்

## வாரம் ஒரு சிந்தனை:

மனிதர்களுள் பலர் மலர்களை போன்றவர்கள்,
கவனமாகப் பழகு!

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 4<br>சுடர்: 14 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

விழி: வழி

## அங்கத்துவ அழைப்பு

'காவலன் கண்மணிகள்' அங்கத்துவ எண்ணிக்கை முந்நூறாக இன்னும் சிறு தொகைதான் உண்டு இவ்வாண்டுக்குள் எண்ணிக்கை ஐநூறை எட்டி விடவேண்டும் என்பது எனது ஆவல்.

கௌரவ அங்கத்துவ எண்ணிக்கை 41. இவ்வெண்ணிக்கை 100 ஆகவேண்டும்.

அன்புக் கண்மணிகாள்! அங்கத்துவம் பெற்றால் மட்டும் போதாது. காவலனில் வரும் ஆக்கங்களைப் படிக்கவேண்டும். ஆக்கங்களை ஆக்கவேண்டும். காவலனின் விற்பனைத் தொகையை 10,000 ஆக்கவேண்டும்.

'காவலன் கண்மணிகள்' பாடசாலையில் படிப்பிலும் மற்றும் ஆக்க முயற்சிகளிலும் சகோதர மாணவருக்கு முன்மாதிரியாக விளங்கவேண்டும் குழந்தை யேசுவின் ஆசிகள் என்றும் உங்களுக்குள் நிறைவதாக!

அன்பின்
அன்பு விழி

## இறை அழைப்புக்கு செவிமடுத்து ஆற்றலைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

இறைவன் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு விசேட அழைத்தலைக் கொடுக்கிறார். தியானத்தின் மூலம், ஆழ்ந்த செபத்தின் மூலம் இறைவனின் அழைத்தலை நாம் எளிதாக அறிந்து கொள்ளலாம்.

கல்வி கற்பதற்கும், பாடகர் குழாம் அங்கத்தினர் என்ற முறையில், இறைபுகழ் பாடவும் இறைவன் நம்மை அழைத்துள்ளார். எனவே அவர் அழைப்பிற்கு செவிசாய்த்து நாம் நமது ஆற்றலை வளர்க்கவும், அதன் மூலம் இறைத்தொண்டு செய்து அவரை கௌரவிக்கவும் கடமைப்பட்டுள்ளோம்.

ஒரு முறை இறைபுகழ் பாடுவது, இரு முறை செபிப்பதற்கு ஒப்பாகும் என்று புனித அகுஸ்தீனார் கூறியுள்ளார், எனவே நம்குரல் வளத்தைக் கெடுக்கும் தகாத பொருட்களை தேவையற்ற முறையில் உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்—இதில் புகைத்தல், தாம்பூலம் தரித்தல் மட்டுமல்லாது. ஐஸ்கிறீம், தேனீர், காப்பி அதிகமாக உட்கொள்வதும் அடங்கும். அதிமதுரம், இளம் மாந்தளிர் குரலுக்கு இனிமை கூட்டும்.

நமது ஆற்றலைப் பெருக்க இறைவனிடம் மன்றாடி பயிற்சிகளில் ஈடுபடுதல் நமக்கு சிறந்த பயனைக் கொடுக்கும்.

தொகுப்பு
சி. யேசுதாசன்
அங். எண்: 229

## நானும் மனிதன்

நானும் மனிதன் அவர்களும் மனிதர்.
நானிலம் போற்ற ஆறறிவுள்ள, ஆண்டவனின் சாயல்
நாட்டை ஆளும் நல்லரசனும்
நெடுமுடிதரித்த நெஞ்சங்களும் மனிதர்கள்தான்.

அறிவீனமாய் ஆவலாதிகூறி வறியவராய்த்திரிவதும்
தந்திர முறையில் தீவிரமுறையில் சூறையாடுவோரும்.
தெரிந்தும் தெரியாது வாழும் மாந்தரும்—இப்
பூவுலகின் பரிதாபமான பாவிகள்.

கைதிகள் அதிகமாக காரணம் கேட்காமல்
களவுகள் பலசெய்து கடவுளைத் தூசித்து
கன்னியத்தை விட்டு கடமையில்தவறி—பின் (3)
கவலையில் வாழும் கலங்கிய உள்ளமும் மனிதனே!!...

தை. பத்திநாதன்
அ. எண். A/14,
அ. ம. தி. குருமடம்

## எழுதிச் செபியுங்கள் போட்டி 33

### "புனிதத்தன்மையின் உணர்வுக்குத் திரும்ப"

ஒரு செபம் எழுதி 1-6-90 ற்கு முன் "பாதுகாவலன்," அ. பெ. இல; 2 யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள் சிறந்த செபம் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்டு பரிசு ரூபா 25/— உம் உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். பரிசு பெறுபவர் பெயரும் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

போட்டி 32 இல் பரிசு பெறும் செபம்

### "மீண்டும் மோதல் ஏற்படாமல் இருக்க"

கண்ணை இமை காப்பது போல் எம்மை நாள்தோறும் காக்கும் இறைவா! இவ்வளவு காலமும் எத்தனையோ இடையூறுகள், வன்செயல்கள், மோதல்கள் எல்லாவற்றிலும் இருந்து எங்களைக் காப்பாற்றியமைக்கு உமக்கு நன்றி கூறுகின்றோம். தந்தையே இறைவா! எமது நாட்டில் சமாதானமும், ஒற்றுமையும் நிலவி வரும் வேளையிலும், மக்கள் ஆறுதல் அடைந்து வருகின்ற வேளைகளிலும் மீண்டும் எவ்வித மோதல்களும் ஏற்படாமல் இருக்க உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்!

ஞா. ஜோக்கிளின், இரட்டைக்குளம், முருங்கன்.

## புனித இராயப்பர் மகளிர் இல்லம்

யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மகளிருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். முறைசார்ந்த கல்வியை (ஆகக் குறைந்தது க. பொ. த. (சா. த.) 8 சித்திகள்) சித்தியாக முடித்துவிட்டு, முறை சாராக்கல்வியில் முதிர்ச்சியடைய விரும்பியும், பணவசதியின்றி தடைப்பட்டிருக்கும் மகளிருக்கு இலவச விடுதியும், இலவசமாக கம்பியூட்டர், தட்டச்சு, தையல், கைப்பணி, வீட்டுப்பணி படிக்கும் வாய்ப்பும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படுகின்றன.

தகுதியுடையோர் குடும்ப விபரத்துடனும், பங்குத்தந்தை/துறவியர் கடிதத்துடனும் வைகாசி 15ஆம் திகதிக்கு முன் பின்வரும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

அதிபர்,
புனித இராயப்பர் மகளிர் இல்லம்,
123, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ம. நீக்கிலான்

பிறப்பு: 1928-06-01
இறப்பு: 1988-04-25

ஆண்டிரண்டானாலும்
ஆறாது எம் துயர்
மாண்டு நீர் போனாலும்
தீராது எம் கவலை.
காணும் இடமெல்லாம்
உங்கள் நினைவலைகள்
கண்ணை மூடிவிட்டால்
தீராத கனவுகள்.
கருத்தினில் மகிழ்வில்லை,
மனத்தினில் நிம்மதியில்லை,
கர்த்தர் காத்திடுவார்
பரகதி சேர்த்திடுவார்
தப்பாது வேண்டுகிறோம்.
கதியிழந்த நாமெல்லாம்.

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

12ஆம் வட்டாரம்
புங்குடுதீவு.

A/98

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி.
பொன்றோஸ் அமிர்தநாதர்

தோற்றம்: 1?-06-1910
அழைப்பு: 7-04-1990

"என் நாட்களோ நிழலைப் போல் சாய்ந்து போயிற்று, ஆயினும் என் சகோதர சகோதரிகளே நீங்களாயினும் என்னை மறவாதீர்கள்."

வாழ்வு ஒரு திங்கள் விரைவாக
மறைந்ததம்மா,
காலமெல்லாம் காத்துக்
கடிதினில் பறந்தாயம்மா
கொடையில் சிகரமெனச்
சிறப்பாக வாழ்ந்தாயம்மா,
கணவன் பிள்ளைகளைக் கனிவாகப்
பார்த்தாயம்மா.
உற்றார் உறவினரின் உறவுகளை
வளர்த்தாயம்மா
உயிர் ஊட்டும் உதிரமாக
வாழ்ந்து மடிந்தாயம்மா
காத்தவனே உமதன்பைக்
கவர்ந்திட்டான் நாம் கலங்க
இறைவனிடம் எம்மவர்க்காய்
எப்போதும் வேண்டிடுவாய்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 7-5-90 திங்கட்கிழமை காலை 6 மணிக்கு சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்திலும், மன்னார் புனித செபஸ்தியார் ஆலயத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
மக்கள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
17/3 கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

A/96

## சன சமூக நிலையம்

பாகிஸ்தானிலுள்ள டாஸ்கா என்னுமிடத்தில் கிராமப்புறங்களிலுள்ள கிறிஸ்தவப் பெண்களுக்கு சன சமூகநிலையங்கள் அமைக்கப்படப் போவதாக பஞ்சாப் மாநில சபை அங்கத்தவரான ஷீலா சாள்ஸ் கூறியுள்ளார். அங்கு அண்மையில் நிறுவப்படப்போகும் ஆடை தயாரிப்பு பயிற்சிநிலையத்துக்கு அரசு ரூ. 500 000 வழங்குமெனவும் அவர் தெரிவித்தார்.

### 1ஆம் ஆண்டு நினைவு

அமரர் திரு. நீக்கிலாப்பிள்ளை
அந்தோனிப்பிள்ளை
(இராசையா)



மண்ணில்: 14-11-1911
விண்ணில்: 08-05-1989

"சமாதானத்தில் இளைப்பாறுவாராக"

"இறைவா! உன் அன்பினிலே
எமை வளர்த்து,
வாழ வைத்து
இல்லத்தின் சுடர் விளக்காய்
நின்றொளிர்ந் தெம்
மனங்களிலே
என்றும் நிலைத்திருக்கும்
அன்பு நிறை தந்தையர்க்கு
நித்திய பேரின்ப முடி
'நேயமுடன் ஈந்தருள்வீர்"

இவரது ஆன்ம சாந்திக்காக 08-05-90 செவ்வாய்க்கிழமை காலை 6-00 மணிக்கு இளவாலை, புனித அன்னம்மாள் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். உறவினர் அன்பர்கள், அனைவரையும் இத்திருப்பலியிற் பங்குபற்றி, இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காகச் செபிக்குமாறு கனிவுடன் வேண்டுகின்றோம். நன்றி.

அன்பு ஐயாவின் நீங்கா
நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரர்கள், சகோதரர்.
உறவினர்.

சிறுவிளான்,
இளவாலை,

A/94

## 1990களை நோக்கி.......

## தூரத்துப்பார்வை அமதிகள் மாநாடு

இப்பகுதியில் வெளியாகும் கருத்துக்கள் சிந்தனைகளுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்

### 5

**வடமாகாணத்தின் பின்னணி**

அமதிகள் சபையின் ஸ்தாபகர் — பேரருட் திரு இயூஜீன் டீமசனொட் அவர்களின் காலத்திலேயே அமதிகள் ஈழம் வந்தார்கள். 1848 ஆம் ஆண்டு ஈழம் வந்த அமதிகள் யாழ்நகரில்தான் முதன்முதலாக காலடி எடுத்து வைத்தார்கள். "யாழ் மறைமாவட்டத்தின் அன்றைய எல்லைகள் மிக விரிந்திருந்தன. வடக்கே பருத்தித்துறை, கிழக்கே திருமலை மட்டுநகர், மேற்கே சிலாபம், தெற்கே குருநாகல் என்று 13,542 சதுர மைல் கொண்டதாக இருந்தது. அமதிகள் வருவதற்கு முன்னர் இம்மாவட்டத்தில் பணிபுரிந்தவர்கள் பதினொரு குருமார். "(கரவையூர்ச் செல்வம், 1976, பக். 242). அன்று தொட்டு இன்று மட்டாக — அதாவது கடந்த 142 வருடங்களாக அமதிகள் எண்ணிக்கையிலும் வளர்ந்து, பணிகளிலும் வளர்ந்து இன்று ஓரளவு நிமிர்ந்து நிற்கின்றார்கள் என்று கூறின் மிகையாகாது.

ஈழத்தில், அமதிகள் ஒரு மாகாணமாகவே (Province) இயங்கி வந்தார்கள்.

1960களிலும் 70களிலும் இருந்து நற்செய்தித் தூதுவர்களாகச் சென்ற அமதிகள், இந்தியாவிலும், பாகிஸ்தானிலும், வங்காளத்திலும் துவக்கிய ஒரு சில ஆண்டுகளிலேயே தனித்துவம்பெற்று தாய்மாகாணத்துடன் இணைந்திருந்தாலும், அவை ஒவ்வொன்றும், தனி அந்தஸ்துகளைப் பெற்றது. (Delegations) அங்கத்தவர் வளர்ச்சிக்கும், அந்தந்த நாட்டு அழைத்தல்களின் வளர்ச்சிக்கும், பணி வளர்ச்சிக்கும், ஆரோக்கியமான நிர்வாக அமைப்பிற்கும் இப்படிப்பட்ட ஓரளவு சுதந்திரமான தனித்துவமான அந்தஸ்து அவசியம். மேற்கூறிய எமது அயல்நாடுகளுக்கு நற்செய்தித் தூதுவர்களாகச் சென்ற அமதிகளுள் பெரும்பான்மையினர் வடமாகாண மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள்தான் என்பது இவ்விடத்தே சோடிட்டுக் காட்டப்படவேண்டும்.

ஆனால், வடமாகாணத்தில் அமதிகளின் வளர்ச்சி குன்றிக் குறைந்து வந்தது. ஈழம் ஒரே மாகாணமாயிருந்த காரணத்தினால், தலைமைச் செயலகம், மற்றும் முக்கிய நிறுவன அமைப்புகள் கொழும்பிலும், கண்டியிலும், மற்றைய தென்னகப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டன. உதாரணமாக— "பிரசங்கிகள் கூட்டம்" என்று பொதுவாக அழைக்கப்படும் அமதிகளின் "பிரசங்கிகள்" எல்லோரும் — சிங்களவரும், தமிழரும்— வென்னப்புவாவில் குடிகொண்டிருந்தனர். தேவைக்கும் அழைப்பிற்கும் இணங்கியே தமிழ்ப்பகுதிகளுக்கு வந்து சென்றனர். வடமாகாணத்தில் அமதிகள் தமது தனித்துவமான பணிகளில் ஈடுபடக்கூடிய வாய்ப்புகள் அமைக்கப்படவில்லை.

ஆம், 142 வருடங்களின் பின்னரும், எத்தனையோ அமதிகளை உருவாக்கிய வடபகுதி தனித்துவம் பெற அதாவது ஒரு தனி மாகாணமாக வளரத் தவறிவிட்டது.

**தனித்துவ வித்துக்கள்:**

1982 ஆம் ஆண்டு கண்டியில் நடைபெற்ற அமதிகள் மாநாட்டில் முதன்முறையாக வடபகுதியின் தனித்துவமான அமைப்பின் அவசியம் நிலைநிறுத்தப்பட்டது. இந்தியா, பாகிஸ்தான், வங்காளம் போன்ற நாடுகளில் அமதிகளின் அமைப்புகள் உதாரணங்களாக எடுக்கப்பட்டன. ஆயினும், அப்பொழுது ஈழநாட்டில் நிலவிய அரசியல் சூழலைக் காரணங்காட்டி, தனித்துவக் கோரிக்கை அதே மாநாட்டில் தற்காலிகமாகப் புதைக்கப்பட்டது. அதாவது, பல அமதிகள், வடபகுதி அமதிகள் தனித்துவச் செயல்பாட்டுக் கோரிக்கையை, தமிழீழக் கோரிக்கைக் கண்ணோட்டத்துடன் பார்த்தார்கள். இவையெல்லாம், சிங்களத் தேசிய வாதத்தின் விளைவாக ஏற்பட்ட இனவாத மயக்கத்தில் சிக்குண்ட தென்னகத் திருச்சபையுடன் அமதிகளும் இரண்டறக் கலந்துவிட்டதினால் ஏற்பட்ட விளைவோ, அன்றேல் வடகிழக்குப் பகுதிகள் அமதிகளால் புறக்கணிக்கப்பட்ட நிலைப்பாடோ என்று நடுவு நிலைமையுடன் ஆராயப்படவேண்டிய ஒன்று.

கரவையூர்ச் செல்வம்

பாதுகாவலன்
PATHUKAVALAN

# தமிழ் மறையாசிரியர்கள் தேசிய ரீதியில் ஒன்று கூடினர்

தமிழ்த் தேசிய ஆணைக் குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட மறை ஆசிரியர்களுக்கான 6 நாள் கருத்தரங்கு சித்திரை மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் இடம்பெற்றது. தமிழ்த் தேசிய ஆணைக்குழுவின் செயலர் அருட்தந்தை நவரெட்ணம் அவர்களும், யாழ் மட்டுநகர் மறைக்கல்வி இயக்குநர்கள் அருட் தந்தை சகாயநாயகம், அருட் தந்தை தேவதாஸ் அவர்களும் கருத்தரங்கை முன்னின்று நடத்தினார்கள்.

கண்டி, பதுளை மறைவட்டங்களைத் தவிர யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, சிலாபம், மட்டக்களப்பு ஆகிய மறைவட்டங்களிலிருந்து இருபத்தைந்து மறை ஆசிரியர்கள் பங்கு கொண்டார்கள். அழைப்பு, அப்போஸ்தலர் பணி அர்ப்பணிப்பு இவற்றை மையப் பொருளாக வைத்து, பழைய புதிய ஏற்பாட்டு ஆதாரங்களுடன் விரிவுரைகளும், குழு ஆய்வுகளும் நடாத்தப்பட்டது. மறைக்கல்வி இயக்குநர்களும், யாழ். மட்டுநகர் நிரந்தர மறை ஆசிரியர்கள் தேவதாஸ், சவுந்தரம், அந்தோனிப்பிள்ளை, பங்கிராஸ், ஜெயசீலன் ஆகியோர் உரைகளை நிகழ்த்தினார்கள். ஒவ்வொரு நாளும் திருப்பலியோடு சிறப்பு வழிபாடுகளும் இடம்பெற்றது. இறுதிநாள் திருப்பலியில் ஒவ்வொரு மறை ஆசிரியர்களும் தங்கள் அர்ப்பணிப்பு வாக்குறுதிகளை, அடையாளப் பொருட்களை காணிக்கையாக்குவதன் ஊடாக வழங்கினார்கள்.

முன்னாள் திருமலை மட்டுநகர் ஆயர் தலைமையில் பங்குபற்றியதற்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. பல்வேறு கலைநிகழ்ச்சிகள் வழியாக தங்கள் அனுபவங்களை, சந்தோஷங்களை, நன்றிகளைத் தெரிவித்து நின்றார்கள் தேசிய ரீதியில் ஒருங்கிணைந்த இந்த மறை ஆசிரியர்கள்.

## வேதாகமக் கருத்தரங்கு

இன்றைய கிறிஸ்தவ இளைஞர்களுக்கு இன்றியமையா தேவையாக இருக்கின்ற வேதாகம அறிவை புகட்டுவதற்காக முல்லைத்தீவுப் பங்கில் சித்திரைத் திங்கள் 19, 20, 21, 22, ஆகிய தினங்களில் வேதாகமக் கருத்தரங்கு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இக்கருத்தரங்கில் வேதாகமத்தின் வெவ்வேறு பிரிவுகளுக்கு நான்கு குருக்கள் நான்கு நாட்கள் விளக்கவுரை வழங்கினர். இதிலே முல்லைத்தீவின் வெவ்வேறு பகுதிகளான கூழாமுறிப்பு, முன்றியவளை, தண்ணீரூற்று, வற்றாப்பளை, அளம்பில், சிலாவத்தை, முல்லைத்தீவுப் பட்டினம் மட்டுமல்லாது மாங்குளம், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளிலிருந்து 140 இளைஞர், யுவதிகள் மிக ஆர்வமுடன் பங்கு பற்றியது குறிப்பிடத்தக்கதாகும்.

குணசீலன்

## வங்க நகரில் கருத்தரங்கு

வங்காலையில் கார்மேல் சபைக்கன்னியர்களால் ஏப்ரல் 23 அன்று காலை 9-15 மணியளவில் தேவாலயத்தில் 25 மேற்பட்ட மாணவிகளுடனும் பங்குத்தந்தை அருட்திரு. போல் நட்சத்திரம் அவர்களின் முன்னுரையின் மையப் பொருளாக அழைத்தல் என்ற செய்தி விடுக்கப்பட்டது. "ஷைப்பு" பற்றிய இனிய இசைக்கீதம் தொனித்தது. உலகெங்கும் சென்று கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு நற்செய்தி அறிவித்து நற்செய்திக்கு மாறாக எழும்பும் எதிர்க்கருத்துக்களுக்கு நல்ல பதில் கருத்துக்களைக் கொடுத்து மக்களை மீண்டும் கத்தோலிக்கத் திருச்சபையில் சேர்க்கவும் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

தகவல்: எம். ஜெனிற்றா குலாஸ்

## கத்தோலிக்கர் அரசியலில் ஈடுபட வேண்டும்

நாட்டின் குடிமக்கள் என்ற முறை கத்தோலிக்கர் பொருளாதாரம், அரசியல் கலாச்சாரம், பாதுகாப்பு எனும் பல துறைகளில் ஈடுபடவேண்டியவர்களாக இருக்கின்றனர். இந்தோனேசியத் திருச்சபை கத்தோலிக்க பொது நிலையினர் அரசியலில் ஈடுபடுவதை ஊக்குவித்து வந்துள்ளது. நாட்டின் பஞ்சசீலக் கொள்கைக்கு அமைய, கத்தோலிக்க அரசியல் வாதிகள் பல சமூக பொருளாதார விடயங்களில் தமது நிலையை வெளிப்படுத்தி அரசியலுக்குப் பங்களிப்புச் செய்துள்ளனர்.

## திருமண வாழ்வுக்கு ஆயத்தம்

பம்பாயில் ஸ்பானிய குருவானவரான பிதா டானியல் பெர்னான்டோ திருமணமாகப் போகும் தம்பதிகளுக்கு வார இறுதி கருத்தரங்குகளை நடத்தி வருகிறார். 2000 தம்பதிகள் நிறைவான திருமண வாழ்வு வாழ இவர் உதவியுள்ளார்.

இது போன்ற வார இறுதிக் கருத்தரங்குகள் திருமணமான தம்பதிகளுக்கும் நடத்தப்பட்டு அவர்களது வாழ்வை வளம் பெறச் செய்துள்ளன.

## கியூபாவில் அமெரிக்க தொலைக்காட்சி அழிவுக்கு வழிவகுக்கும் என அச்சம்

அமெரிக்க ஐக்கிய நாட்டில் புளோரிடாவிலிருந்து கியூபா நாட்டிற்கென ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் கியூபா மக்களின் நன்னெறி வாழ்விற்கு இடையூறாய் இருக்கின்றது என்று கியூபா ஆயர்கள் குறை கூறியுள்ளனர். 19ஆம் நூற்றாண்டின் கியூபா ஜனநாயக வாதி ஹொசே மாத்தேயின் பேரில் ஒளிபரப்பாகும் இத்தொலைக்காட்சியின் அலை இடைப் பகுதியை கியூபா இராணுவத்தினரும், பொது மக்களும் விரும்பிப் பார்க்கின்றனர் எனக் கூறும் ஆயர்கள், இத்தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அரசியல் நோக்குடையது என்று கூட ஏற்க முடியாது என்றனர்.

கியூபா அரசு முன்மொழிந்துள்ள படி இவ்வொளிபரப்பை நிறுத்த உரையாடல் மூலமே இயலும் எனத் தாங்கள் நம்புவதாக ஆயர்கள் மேலும் தெரிவித்தனர். இதற்கிடையே இத்தொலைக்காட்சி ஒலிபரப்பு அழிவுக்குப் பாதை அமைக்கும் சாதனம் கியூபா அரசுத் தலைவர் பிடல் கஸ்ரோ இவ்வொளிபரப்புக் குறித்து விமர்சித்துள்ளார்.

அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து நடைபெறும் இவ்வொளிபரப்பு அனைத்துலக சட்டத்திற்கு முரணானது என்று கியூபாவின் சமூகத் தொடர்புத்துறை அமைச்சர் பத்திரிகையாளரிடம் கூறினார்.

## இறை அழைப்பு

அறம் தேய்ந்து மறம் பெருகும் இவ்வுலகிலே அருள் மகன் யேசுவின் தாகமதைத் தணித்திட அறம் செய்து, செபம் செய்து, தவம் செய்து அன்புப்பணியாற்றிட அழைக்கின்றார் இறைவன் ஆம்.

இன்று உன்னை அழைக்கின்றார். இலங்கை இந்திய நாடுகளில் செபமாலைத்தாசர் (Rosarians) குருக்களாகவும், அருள் சகோதரர்களாகவும் இறைபணியாற்றி வருகின்றனர்.

க. பொ. த (உ. த). க. பொ. த. (சா. த) வகுப்புகளில் படிக்கும் மாணவர்களும் படிப்பை முடித்தவர்களும் உடனே தொடர்பு கொள்ளவும்.

Director
Arul Ashram
No 5, Temple Road
Jaffna

அதிபர்
அருள் ஆச்சிரமம்
இல. 5 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81

## "கார்மேல் நந்தவனத்தில் பூத்த இரு புதுமலர்கள்"



நவாலியூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ம. சுதர்ஷினி கார்மேல் சபையின் அருட் சகோதரியாக நிச்சயவாக்குத்தத்தம் பெற்றுள்ளார் - 1962 ஆம் ஆண்டு ஆடித் திங்கள் முதலாம் நாள் பிறந்த இவர் மரியாம்பிள்ளை - லூர்த்தம்மா தம்பதிகளின் புத்திரியாவர். துறவற வார்த்தைப்பாட்டை முடித்து நாடு திரும்பிய அருட் சகோதரி அவர்களின் நன்றிக் கூட்டுத் திருப்பலி சித்திரைமாதம் 24 ஆம் திகதி நவாலி புனித பேதுரு வானவர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டபோது மறையுரையாற்றிய அருட்திரு. P. M. இம்மானுவேல் அடிகள் "அறுவடைக்கென குடும்பத்திலிருந்து ஒருவரை இறைபணிக்கென அர்ப்பணிக்கும் பெற்றோரின் காணிக்கையை எல்லாற்வறையும் விட மேலான மகிழ்வுடன் இறைவன் ஏற்றுக் கொள்வார்." என்று குறிப்பிட்டார்.



1982 ஆம் ஆண்டு அப்போஸ்தலிக்க கார்மல் மடத்தில்சேர்ந்தசிஸ். ஞானதருசினி அவர்கள் 1985 இல் தனது முதல் வாக்குறுதியை பெற்ற பின்னர் புனிதசம்பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியப்பணி புரிந்ததோடு புனிதயுவானியார் பங்கிலும் தன் மறைப் பணிகளைச் செய்தார்.

மூன்று மாதங்கள் இந்தியாவில் தன்னைத் தயார் செய்த பின் 17-4-90 இல் இந்தியாவில் சபையின் நிரந்தர கன்னிகையாக நித்திய வாக்குத்தத்தம் கொண்டார்.

நாடுதிரும்பியதும் சித்திரை 30 இல் கரம்பொன் செபஸ்தியார் ஆலயத்தில் அருட்திரு செல்வராசா அடிகள் தலைமையில் நன்றிக்கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அழைப்பும், அர்ப்பண வாழ்வும் இன்றைய சமுதாயத்தின் சவாலும், தேவையுமாக இருக்கிறது எனகரம்பொன் பங்கைச் சேர்ந்த திரு. திருமதி. எஸ். எம் அல்பிறட் மேபிள் அந்தோனிப்பிள்ளை தம்பதிகளின் ஆறாவது புதல்வி சங்கைக்குரிய சிஸ்ரர் எம். ஞானதருசினியின் (அ. கா) நித்திய வாக்குத்தத்தின் பின் பங்கில் நடந்த நன்றிக் கூட்டுத்திருப்பலியில் மறையுரை ஆற்றிய கமிலஸ் நிர்மலன் அடிகள் காலத்தின் தேவைபற்றி சொன்னார்.

'கார்மேல்' நந்தவனத்தில் பூத்த இப் புதுமலர்கள் இறை மணம் பரப்பி எவ்லோர்க்கும் நிறைவான பணிசெய்ய இறைவன் அருள் புரிவாராக.

தகவல்:
சிறில் சுகந்தரன்
நவாலியூர்

**உன்னைமீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**